நெஞ்சில் நிலைத்தவர்கள்

நெஞ்சில் நிலைத்தவர்கள்

(தமிழ்த் துணைப்பாட நூல்)

[ஏழாம் வகுப்புக்குரியது]

ஆசிரியர் :
வித்துவான் மு. பழநிச்சாமி, M.A.
தமிழாசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
அவிநாசி.

விலை : 80 காசுகள்

திருத்தொண்டர்
கோயமுத்தூர் - 1.
கிளைகள் :
சென்னை - 1. திருநெல்வேலி - 1.

முதற் பதிப்பு : 1967
திருத்திய பதிப்பு : 1968
மறு பதிப்பு : 1968

Name of the Book : NENJIL NILAITHAVARKAL

Name of the Author : M. Palaniswamy, M.A.

Name of the Publishers : THE BOOK CENTRE, Coimbatore-1.

Name of the Printers : The Progressive Printers, Madras-1.

Kind of paper used : 10·9 kg. White Printing.

Price per copy : 80 Paise.

தமிழ்நாடு பாடப் புத்தகக் குழுவினர்
அங்கீகரித்தது. ஆதாரம் :
கெஜட் பக்கம் 7 தேதி : 24—4—1968.

சென்னை நகர ஏஜன்டுகள் :
எம். தாமோதரம் & கம்பெனி
சென்னை-1.

முன்னுரை

இளஞ் சிறுவர்களுக்குக் கதை கேட்பதில் தனி ஆர்வம் உண்டு. உண்ணுமல் உறங்காமல் எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் இளநெஞ்சம் கதை கேட்டுக்கொண்டே இருக்கும். மனித குலத்தின் நன்மைக்காகப் பாடுபட்ட பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றை இத்தகைய இளமைப் பருவத்தில் அவர்களுக்குக் கூறுவது பெரும் பயன் அளிக்கும். இதனுல், அப்பெரியார்களைப் போலவே பயனுள்ள வாழ்வு வாழவேண்டும் என்னும் ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் பிறக்கும். இக்கருத்தினை உளத்தில் கொண்டே இச்சிறு நூலை ஆக்கியுள்ளேன். பயனுள்ள முறையில் வாழ்ந்த பெரியார்கள் ஐவருடைய வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக மாணவர்க்கு ஏற்ற முறையில் எளிய நடையில் எழுதியுள்ளேன்.

இதனை மாணவர்கள் படித்துப் பயன்பெற ஆசிரியப் பெருமக்களும், பள்ளியை நடத்துவோரும் உதவி செய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

★

1. பிளாரன்சு நைட்டிங்கேல் அம்மையார்

இவ்வுலகில் எத்தனையோ மக்கள் தோன்றி மறைகிறார்கள். ஆனால், எல்லாருடைய பெயரும் நிலைத்து நிற்பது இல்லை. எல்லாருக்கும் புலவர்கள் வாழ்த்து எடுப்பது இல்லை; மக்கள் விழாக் கொண்டாடுவதும் இல்லை. செயற்கரிய செயல் செய்தவர்களையே நாம் பாராட்டுகிறோம்; மனித குலத்தின் நல்வாழ்வுக்குச் சேவை செய்தவர்களையே போற்றுகிறோம். இவ்வாறு புகழ் படைத்த பெரியோர்கள் எல்லா நாட்டிலும் தோன்றியுள்ளார்கள். ஆண்களே அல்லாமல் பெண்களும் நற்பணி புரிந்து தம் பெயரை நிலைநாட்டி உள்ளனர். அவர்களுள் பிளாரன்சு நைட்டிங்கேல் அம்மையார் முதன்மையாக வைத்துப் பாராட்டத்தகும் பெருமை உடையவர் ஆவார். அவ்வம்மையாருடைய வரலாற்றை இங்குக் காண்போம்.

இங்கிலாந்தில் டெர்பிஷயர் என்னும் இடத்தில் நைட்டிங்கேல் என்னும் பெயருடைய குடும்பம் ஒன்று இருந்தது. அக்குடும்பம் மிகவும் புகழ்வாய்ந்தது. வில்லியம் எட்வர்டு ஷோர் என்பவர் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் நன்கு கற்றுக்

கல்வி அறிவு மிக்குடையவராய் விளங்கினர். அத்துடன் அவர் மிகவும் இரக்கமும் கொடைப் பண்பும் உடையவராய்த் திகழ்ந்தார். அப்பெரியார் ஏழைகளுக்கு உதவிசெய்து வந்தார்; பள்ளிகள் பலவற்றிற்கு நன்கொடை வழங்கிக் கல்விச் செல்வம் தழைக்க அருள்புரிந்துவந்தார். அவருடைய மனைவியின் பெயர் பிரான்ஸஸ் என்பது ஆகும். அவ்வம்மையாரும் புகழ்வாய்ந்த குடும்பத்தில் தோன்றியவர். அவர் அழகில் சிறந்து விளங்கியது போலவே அன்பு, இரக்கம், கொடை முதலான பண்புகளிலும் சிறந்து விளங்கினர். இவ்விருவருக்கும் அருந்தவச் செல்வியாய் நைட்டிங்கேல் தோன்றினர். அவரின் அருங்குணச் சிறப்பினுல்தான் இன்று அக் குடும்பத்தின் பெயரான நைட்டிங்கேல் என்பது எங்கும் பரவியுள்ளது; எல்லாருக்கும் தெரிகிறது. இவருடைய முழுப்பெயர் பிளாரன்சு நைட்டிங்கேல் என்பது ஆகும். நாளடைவில் நைட்டிங்கேல் என்னும் குடும்பப் பெயரே இவர் பெயராய் நிலைத்து நின்று விட்டது.

வில்லியம் எட்வர்டு இயற்கை அழகில் ஈடுபாடு உடையவர். ஆகவே, அவர் லீஹர்ஸ்ட் என்னும் பள்ளத்தாக்கில் இயற்கை அழகின் நடுவில் அழகியதொரு மாளிகையை எடுப்பித்தார்; அம் மாளிகையில் தம் குடும்பத்துடன் வாழ்ந்துவந்தார். இவருடைய மாளிகையைச் சுற்றிலும் உழவர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் இக்குடும்பத்தினர் அன்புடன் பழகிவந்தனர். இவருடைய மனைவியார்

பிரான்ஸஸ் அம்மையார் மருத்துவ அறிவு உடையவராயும், ஏழை மக்களுக்கு வரும் நோய்களைத் தீர்த்துத் தொண்டு புரிவதில் ஆர்வம் உடையவராயும் விளங்கினர்.

தம்முடைய தாயார் நோயாளிகளிடம் உரையாடுவதையும், அவர்களுக்கு மருந்து கொடுப்பதையும் ஆறு வயதும் நிரம்பாத நைட்டிங்கேல் அம்மையார் நன்கு கவனிப்பார். அவருடைய விளையாட்டிலும் தாயின் செயலே அமையும். மண்வீடே மருத்துவச்சாலை; விளையாட்டுப் பொம்மைகளே நோயாளிகள். அம்மையாரே மருத்துவர். அவர் பொம்மையின் அசையாத கரங்களைப் பிடித்துப் பார்ப்பார்; பேசாத பொம்மையுடன் பேசுவார்; மருந்து கொடுப்பார். இச்செயல் இவருடைய இளமை நெஞ்சின் பண்பினைச் செவ்வனே விளக்குகிறது.

இவர் மிகவும் இரக்கம்கொண்ட சிந்தை உடையவர் என்பதை இன்னொரு செயலும் நன்கு விளக்குகிறது. இவர் எப்பொழுதும் மாலை நேரங்களில் குதிரையின் மீதமர்ந்து மலைச் சரிவுகளில் உலா வருவார். அவ்வாறு ஒருநாள் வந்துகொண்டிருக்கும்போது இடையன் ஒருவன் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தான். எப்பொழுதும் அவன் அருகில் அன்புடன் வளர்க்கும் நாய் இருக்கும். அன்று அந்த நாயினையும் காணவில்லை. அவன் கண்ணில் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது.

அம்மையார் குதிரையினின்றும் கீழே இறங்கி அவனுடைய துன்பத்திற்குக் காரணம் யாது என்பதை மிகவும் பரிவுடன் கேட்டார். "அம்மா யாரோ என்னுடைய நாயை அடித்துவிட்டார்கள். அது நடக்கவும் சக்தி அற்றதாய்ப் போய்விட்டது. அதனால், இப்பொழுது எழுந்து நிற்கவும் இயல வில்லை. அந்நாய் இதுவரை எனக்குத் தோழன் போல் உதவி வந்தது. ஆடுகளை ஒன்று சேர்ப்ப தற்கு அது துணையாய் இருந்தது. இப்பொழுது அந்தத் துணை போய்விட்டது. அதனால் தான் வருந்துகிறேன்" என்று கூறி அவன் கண்ணீர் விட்டான்.

அம்மையாரின் உள்ளம் கரைந்தது. அந்நாய் எங்கு உள்ளது என்பதை அறிந்து அவ்விடத்திற்கு விரைந்தார். அதனுடைய முன்னங் கால் எலும்புகள் முறிந்துபோய் இருந்தன. அந்நாய் மெதுவாகத் தலையைத் தூக்கி அம்மையாரை அன்புடன் பார்த்தது. தாய்மை அன்பு கனியும் அம்முகம் அதனுடைய மறுவாழ்விற்கு நம்பிக்கை ஊட்டுவதாய் இருந்ததுபோலும்! அம்மையார் அதனைத் தூக்கித் தம் மடியில் வைத்துக்கொண்டார்; அன்புடன் முது கினைத் தடவிக் கொடுத்தார்; கால்களுக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுத்தார்; முறிந்துபோன கால் எலும்பு களைச் சரியாக வைத்துக் கட்டினார். இவ்வாறே நாள் தோறும் சிகிச்சை செய்துவந்தார். ஒரு வாரத்தில் நாய் எழுந்து நடக்க ஆரம்பித்தது. இடையன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. போன

பொருள் மீண்டும் கிடைத்ததுபோல் அவன் மகிழ்ச்சி அடைந்தான். விலங்குக்கு உற்ற துன்பத்தைக் கண்டே இவ்வாறு உருகிய அவ்விள நெஞ்சம் மனிதகுலத்தின்மாட்டு எத்துணை இரக்கம் உடையதாய் இருந்திருக்கும் என்பதனை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

தந்தையார் தம் மகள் கல்வி பயில்வதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்துவந்தார். அம்மையாரும் கண்ணும் கருத்துமாய்க் கல்வியைச் செவ்வனே பயின்று வந்தார். இவர் கற்க வேண்டியவைகளைத் தெளிவாய்க் கற்றார்; கற்றவைகளை வாழ்வில் கடைப்பிடித்து வந்தார்; ஓய்வு நேரங்களில் கிராமப்புற மக்களிடம் சென்று பழகினர்; அவர்களுக்கு வேண்டிய உதவிகள் பலவற்றை அன்புடன் செய்தார். அதனால், கிராம மக்கள் இவரை மிகவும் அன்புடன் நேசித்து வந்தனர்.

அம்மையார் செல்வக் குடியிலே தோன்றியவர். இவர் வாழ்வதற்கு வசதியான மாளிகை இருந்தது; உலாவுவதற்கு அழகான பூந்தோட்டம் இருந்தது; இட்ட வேலையைச் செய்துமுடிக்க எத்தனையோ பணியாட்கள் இருந்தனர். ஆனாலும், இன்ப வாழ்வில் இவர் நாட்டம் செல்லவில்லை. கால்கள் பளிங்குத் தரையில் உலவியபோதும் இவர் மனம் என்னவோ ஏழையரைப் பற்றியே எண்ணியது; உருகியது; ஏழை எளியவர்களுக்குத் தொண்டு

செய்வதையே இவர் தம் வாழ்வின் தவப் பயனாய் எண்ணினார்.

அம்மையார் மனித குலத்திற்குத் தொண்டு செய்வதற்குத் தாதியர் (நர்ஸ்) தொழிலே சிறந்தது என்று முடிவு செய்தார்; ஆகவே, அத்தொழிலுக்கு உரிய பயிற்சிபெற விரும்பினார். அந்நாளில் இத் தொழில் தாழ்வானதெனவே கருதப்பட்டது. இத் தொழில் ஏழை எளியவர்களுக்கு உரியதென்றும், செல்வக் குடியிற் பிறந்த மங்கையர்க்கு உரியது அன்று என்றும் மக்கள் கருதி வந்தனர். செல்வக் குடியிற் பிறந்த நைட்டிங்கேல் அம்மையார் இத்தொழிலைத் தாமாகவே விரும்பி ஏற்றுக் கொண்டார்.

அந்நாளில் இரண்டு புகழ்பெற்ற தாதியர் பயிற்சி நிலையங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று இலண்டனில் இருந்தது; மற்றொன்று ஜெர்மனியில் இருந்தது. இலண்டனிலிருந்த பயிற்சி நிலையத்தை எலிசபெத்பிரை என்னும் பெருமாட்டியார் நிறுவி யிருந்தார். ஜெர்மனியிலிருந்த நிலையத்தைப் பாஷ்டர் பிளீட்னர் என்பார் நிறுவியிருந்தார். நைட்டிங்கேல் அம்மையார் இவ்விரு நிலையங்களிலும் பயிற்சி பெற்றார். பயிற்சிக் காலத்தில் இவர் கடமையில் கண்ணும் கருத்துமாய் நடந்துகொண்டார்; நோயாளி களிடம் அன்புடன் பழகிவந்தார். பிணியால் வேதனைப்படுவோர்க்கு ஆறுதல் கூறினார்.

பிறகு நைட்டிங்கேல் அம்மையார் பாரிஸ் மாநகரத்திற்குச் சென்று பல மருத்துவச்சாலை

களைப் பார்வையிட்டார். அங்குத் தாதியர்கள் பொதுநல நோக்கம் உடையவராய் இருந்தனர். அத்தாதியர்கள் நோயாளர்களைச் செவ்வனே கவனித்து வந்தனர். அவர்களின் தொண்டினைக் கண்ட நைட்டிங்கேல் அம்மையார் மனம் மகிழ்ந்தார். இவரும் அவர்களுடன் சேர்ந்து தொண்டாற்றினர். இவர் பாரிஸ் மாநகரத்திலிருந்த தலைசிறந்த மருத்துவச் சாலைகளையெல்லாம் சென்றுபார்க்க விரும்பினர்; அதற்காக இடைவிடாமல் பயணம் செய்தார்; பற்பல சமயங்களில் உறக்கமே இல்லாமல்கூட இருக்க நேர்ந்தது. ஏழை எளியவர்கள் துயரினைத் துடைப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்த அம்மையாருக்குச் சரியாக உண்ணக்கூட நேரம் கிடைக்கவில்லை. இதனல் இவர் உடல் மெலிந்தார்; நோய்வாய்ப்பட்டார். அந்தோ ! எல்லாருக்கும் மருந்து வழங்கிய அந்த மென்மையான கரங்கள் சோர்ந்தன. இனிய மொழி பேசி நோயாளர்களைத் தேற்றிய வாய் மூடிக்கிடந்தது. தாதியர் பலர் அல்லும் பகலும் அருகில் இருந்து அம்மையாருக்குச் சிகிச்சை செய்தனர். எனினும் உடல் நலம் பெறவில்லை. அம்மையார் தாய்நாடு திரும்பினர்; வீட்டில் தங்கிப் பலநாள் ஓய்வு எடுத்துக்கொண்டார். உடல் ஒருவாறு தேறியதும் மீண்டும் தாதியர் பயிற்சியைத் தொடர்ந்து கற்றுத் தேர்ந்தார்.

பின்னர், நைட்டிங்கேல் அம்மையார் இலண்டனில் உள்ள மருத்துவ விடுதி ஒன்றில் மேற்பார்வை

யாளராய் அமர்ந்து பணிபுரியத் தொடங்கினர். அம்மருத்துவ விடுதி கானிங் சீமாட்டியாரால் நிறுவப்பட்டதாகும். அம்மையார் அதில் மேற்பார்வையாளராய் அமர்வதற்கு முன்னர், அதன் நிர்வாகம் சீர்கேடான நிலையில் இருந்துவந்தது. இவர்தம் திறமையாலும், குன்றாத உழைப்பாலும் அதனைச் சீர்திருத்தினர்; நோயாளர்களுக்கு வேண்டிய எல்லா நலன்களையும் தாமே முன்னின்று செய்தார். மிக விரைவில் அம்மருத்துவ விடுதியின் புகழ் எங்கும் பரவியது.

அளவுக்கு மீறிய உழைப்பின் பயனாக மீண்டும் அம்மையாரின் உடல் நலம் கெட்டது. அவர் மீண்டும் ஓய்வு பெற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதனால் பதவியினின்றும் விலகி அவர் ஓய்வெடுத்துக் கொண்டார். அப்பொழுதும் மக்கள் அவரைச் சும்மா விடவில்லை; வீட்டிற்கு வந்துகொண்டே இருந்தனர். அம்மையார் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றுத் தம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்குச் செய்து அனுப்புவார். சிலருக்கு மருந்து வேண்டி இருக்கும். சிலருக்கு இனிய ஆறுதல் மொழியே போதுமானதாய் இருக்கும். சிலருக்கு அறிவுரை தேவையாய் இருக்கும். எவருக்கு எது தேவையோ அவருக்கு அதனை அம்மையார் வழங்குவார்.

*　　*　　*

ஒருமுறை இரஷ்யாவுக்கும் இங்கிலாந்திற்கும் போர் மூண்டது. அப்போரில் பிரான்சும் ஆஸ்திரி

யாவும் இங்கிலாந்திற்குத் துணையாய் நின்றன. இரஷ்யர்கள் இம்மூன்று நாட்டையும் எதிர்த்துப் போரிட்டனர். இரஷ்யர்களுக்குச் செபஸ்தபோல் என்னும் கோட்டை இராணுவ அரணாக இருந்தது. இக்கோட்டை கிரிமியாத் தீவில் அமைந்திருந்தது; மலைகளால் சூழப்பட்டு இயற்கை அரணாக விளங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் இக்கோட்டையை முற்றுகை இட்டு வீரத்துடன் தாக்கின. இரஷ்யரும் வீரத்துடன் போரிட்டனர்.

போரில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வீரர்கள் காயம் அடைந்தனர். அன்றியும் இயற்கையும் பழிவாங்கியது. காலமோ மழைக்காலம்! எப்பொழுதும் மேகம் மழையைக் கொட்டிக் கொண்டே இருந்தது. குளிர்காற்று இரவு பகலாக வீசிக் கொண்டே இருந்தது; வீரர் பலர் நோயுற்று வீழ்ந்தனர். அந்தோ! விழுப்புண் பட்டுப் போரில் மாய்ந்த வீரர்களைவிட நோயுற்று மரணத்தைத் தழுவியவர்களே அதிகம்! இங்கிலாந்துப் படைக்குப் போதிய மருத்துவ வசதியும் கிடைக்கவில்லை. ஸ்குடாரி என்னும் இடத்தில் இராணுவ மருத்துவ விடுதி ஒன்று இருந்தது. அது போதிய சுகாதார வசதியோடு இருக்கவில்லை, அங்கே பேன்களும் மூட்டைப் பூச்சிகளும் மண்டிக் கிடந்தன. நோயாளர்களுக்குப் பணிபுரியப் போதிய அளவு தாதியர்களும் இல்லை. வீரர்கள் நாள் தோறும் மடிந்துகொண்டே இருந்தனர். இந்த அவல

நிலையைச் செய்தித் தாள்கள் மூலம் அறிந்த இங்கிலாந்து மக்கள் நெஞ்சம் வருந்தினர். இந்த இழிநிலையை நீக்கி, வீரர்களுக்கு மருத்துவப் பணி புரிய மக்கள் பலர் தாமாகவே முன் வந்தனர்.

வீரர்களின் பரிதாப நிலை நைட்டிங்கேல் அம்மையாரின் மனத்தை உருக்கியது. வீரர்களின் உயிரைக் காப்பாற்றத் தம்மால் இயன்ற சேவை செய்ய அம்மையார் துணிவு கொண்டார். இங்கிலாந்தின் போர்க்காலச் செயலாளராக இருந்து பணியாற்றிய சிட்னி ஹெர்பர்ட் என்பார் அம்மையாரின் அருங்குணச் சிறப்புக்களை நன்கு அறிந்திருந்தார். போர்க் களத்தில் மருத்துவப் பணி புரிவது என்பது எளிமையான செயல் அன்று. அதற்கு நெஞ்சில் ஊக்கமும் உறுதியும் வேண்டும்; பொதுநலப் பண்பும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அன்பும் இரக்கமும் வேண்டும். இத்தகு அரும் பெரும் பண்புகள் எல்லாம் அம்மையாரிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தன. இதனை அறிந்த சிட்னி ஹெர்பர்ட், அம்மையாரைப் போர்வீரர்களுக்குப் பணிபுரிய வரும்படி அழைத்தார். தாமாகவே இத்தொண்டில் ஈடுபட எண்ணியிருந்த அம்மையாருக்கு, இவ்வழைப்பு மேலும் ஆர்வத்தை ஊட்டியது. அவர் விரும்பி இவ்வழைப்பினை ஏற்றுக் கொண்டார்.

அரசாங்கம் அம்மையாரை ஸ்குடாரி மருத்துவ விடுதியின் மேற்பார்வையாளராக நியமித்தது. இவர் மகிழ்வுடன் அப்பதவியினை ஏற்றுக்கொண்

டார்; முப்பத்தெட்டுத் தாதியர்களுடன் கப்பலில் கிரிமியாத் தீவுக்குப் புறப்பட்டார்.

ஸ்குடாரி மருத்துவ விடுதியில் ஏராளமான பணிகள் அம்மையாரை எதிர்நோக்கி இருந்தன. இவர் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்ததும், அங்கு ஏராளமான எலிகள் இருக்கக் கண்டார். அவை தொற்று நோய்களைப் பரப்பிக் கொண்டிருந்தன.

அம்மையார் சீர்கெட்ட நிலையிலிருந்த அம் மருத்துவ விடுதியை அரும்பாடுபட்டுச் சீர்திருத்தம் செய்தார்; நோயாளிகளுக்கு வாழ முடியுமென்ற நம்பிக்கையை ஊட்டினர். நல்ல காற்றும், தூய தண்ணீரும், துப்புரவான இடமும் உடல்நலத்தைப் பாதுகாப்பன என்றறிந்த அம்மையார் நோயாளிகளுக்கு அவ் வசதிகளை அம்மருத்துவ விடுதியில் தம் முயற்சியால் உண்டாக்கித் தந்தார். அம்மையார் தாம் வந்த காலத்து அஞ்சத்தக்க நிலையிலிருந்த ஸ்குடாரி மருத்துவ விடுதியை மிக ஒழுங்குபட்டதாகவும், மிக்க வசதியுடையதாகவும் மாற்றி அமைத்தார்.

நள்ளிரவில் எல்லாரும் உறங்கிக் கொண்டிருப்பர். ஆனல், அம்மையார் மட்டும் அந்நேரத்திலும் உறங்க மாட்டார்; ஒரு விளக்கினைக் கையில் ஏந்திக் கொண்டு ஒவ்வொரு வீரனையும் சென்று பார்ப்பார்; துயரால் துன்புறுவோர்க்கு ஆறுதல் கூறுவார். இச்செயல் படுக்கையில் கிடந்த வீரர்

களின் உள்ளத்தை உருக்கியது. அவர்கள் எல்லாரும் இவரைத் தெய்வமாகவே எண்ணிப் போற்றி வந்தனர். இத்தெய்வத்தைக் கண்டதும் வலிமை இழந்த கரங்களும் வலிமை பெறும்; வலிமை பெற்ற கரங்கள் இவரை வணங்கி மகிழும்; பேச முடியாத நாவும் பேசும். அப்பேச்சிலே இவரை வாழ்த்தி மகிழும். ஒவ்வொரு வீரனின் நெஞ்சமும் கோயிலாக மாறியது. அக்கோயிலில் நைட்டிங்கேல் அம்மையார் என்ற தெய்வம் வாழ்ந்தது.

போரில் ஒரு வீரனது வலக் கரம் ஒடிந்து விட்டது. மருத்துவர்கள் அவனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "கை மீண்டும் கூடுவது கடினம். எடுத்து விடுதலே நல்லது" என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட அவ்வீரன் வருந்தி அழுதான்; கையிழந்து வாழ்தலைவிடச் சாதலே நல்லது என்று முடிவு செய்தான். நஞ்சு கொடுத்தேனும் தன்னைக் கொன்று விடுமாறு மருத்துவர்களிடம் கூறி அழுதான். இச் செய்தி அம்மையாரின் செவிக்கு எட்டியது. அவர் அவ் வீரன் இருந்த இடத்திற்கு விரைந்து வந்தார்; அவனுக்கு ஆறுதல் கூறினார்; தாம் மருத்துவம் செய்து அக் கையினைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதாய் உறுதி அளித்தார். நம்பிக்கையற்றுக் கிடந்த அவன் நெஞ்சில் மீண்டும் நம்பிக்கை தோன்றலாயிற்று. சாவைப்பற்றி எண்ணிய அம் மனம் மீண்டும் வாழ்வை எண்ணிக் கனவு கண்டது! அம்மையார் கண்ணும் கருத்துமாய் அவனுடைய

காரத்திற்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். விரைவில் அக்கரம் கூடியது; பழையபடியே பலம் உள்ளதாய் விளங்கியது. அவ்வீரன் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லால் வடித்துக் காட்டுவது இயலாத காரியம். அவன் அக்கரத்தால் நெஞ்சம் நிறைவு பெறும்வரை அம்மையாரை வணங்கி மகிழ்ந்தான்.

அம்மையார் எல்லா வீரர்களுக்கும் சத்துள்ள உணவு வேளாவேளைக்குக் கிடைக்கும்படி செய்தார். ஆம், வீரர்களின் வயிற்றுக்கு நல்ல உணவு கிடைத்தது; உடலுக்குத் தேவையான மருத்துவம் கிடைத்தது; செவிக்கு இனிய மொழி கிடைத்தது; உள்ளத்திற்கு நம்பிக்கை என்னும் அருமருந்து கிடைத்தது. ஆகவே, அவர்கள் விரைவில் குணம் பெற்று எழுந்தனர்.

போர் அரங்கில் இருந்த வீரர் பலர் இங்கிலாந்திலிருக்கும் தம்முடைய குடும்பத்திற்குப் பணம் அனுப்ப வழி இல்லாது தவித்தனர். அக் குறையை நீக்க அம்மையார் ஸ்குடாரியில் பணம் அனுப்புவதற்காக ஓர் அஞ்சல் நிலையம் திறக்க ஏற்பாடு செய்தார். இந்நிலையம் வீரர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது. அன்றியும் அம்மையாரும் வீரர்களிடம் எஞ்சிய தொகையினைச் சேகரித்து அவரவர் குடும்ப முகவரிக்கு அனுப்பி வைத்தார். அம்மையார் இவ்வாறு செய்யவில்லையேல் வீரர்களுள் பலர் குடித்தும் ஆடம்பரமாகச் செலவு செய்தும் தங்கள் ஊதியத்தை வீணாக்கி இருப்பர்.

போர் வீரர்களின் குடும்பங்களும் வறுமையில் வாடி இருக்கும். அம்மையார் தம் அரும் முயற்சியால் இந் நிலையினைத் தவிர்த்தார்; பல குடும்பங்கள் கவலையின்றி வாழ வழி செய்தார்.

இவ்வாறு ஸ்குடாரி மருத்துவ விடுதி பன் முறையிலும் சீர்பெற்று விளங்கியது. அதன் புகழ் எங்கும் பரவியது. இதற்கு முதற்காரணமாய் இருந்த நைட்டிங்கேல் அம்மையாரை விக்டோரியாப் பேரரசியார் மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தார்; ஆண்டவன் அம்மையாருக்கு நீண்ட ஆயுளையும் நல்ல உடலையும் தருமாறு வாழ்த்தினர். அத்துடன் அப்பேரரசியார் அம்மையாருக்குப் புதிய பொறுப்பு ஒன்றினையும் நல்கினர். மற்றொரு போர் அரங்கமான பாலக்லாவாவிலும் மருத்துவ விடுதிகள் இருந்தன. பேரரசியார், அம்மையாரை அம்மருத்துவ விடுதிகளைச் சேர்ந்த தாதியர்களுக்குத் தலைமை மேற் பார்வையாளராக நியமித்தார்.

பேரரசியாரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அம்மையார் பாலக்லாவாவிற்குப் புறப் பட்டுச் சென்றார். அம்மையாரின் அருங்குணச் சிறப்புக்களை முன்னமேயே அங்கிருந்த வீரர்கள் கேள்விப்பட்டிருந்தனர். ஆகவே, அவர்கள் உற்சா கத்துடன் அம்மையாரை வரவேற்று மகிழ்ந்தனர். அங்குச் சென்று அம்மையார் ஓய்வின்றி உழைத் தார்; அல்லும் பகலும் கடும் பனியையும் பொருட் படுத்தாது அலைந்தார். அதன் காரணமாக அம்மையார் நோய்வாய்ப்பட்டார். சோம்பல் என்ப

தனைக் கனவிலும் அறியாது கடமையே கண்ணுகத் திரிந்த அவர் படுக்கையில் கிடந்தார். ஆயிரமாயிரம் வீரர்களுக்கு ஆறுதல் கூறிய வாய் அடங்கிக் கிடந் தது. தாதியர்கள் அருகிலேயே இருந்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தனர். இச் செய்தி எங்கும் பரவியது. போர் வீரர்கள் கண்ணீர்விட்டு அழுதனர். அம்மையார் நோய்வாய்ப்பட்ட செய்தி நெடுந்தொலைவிலிருந்த இங்கிலாந்து மக்கள் செவிக் கும் எட்டியது. அவர்கள் அம்மையாருக்கு அருள் புரியும்படி ஆண்டவனைத் தொழுதனர்.

சின்னுட்களில் அம்மையார் குணம் அடைந்தார்; எழுந்து நடமாடத் தொடங்கினுர். அம்மையார் தம் தாய்நாட்டிற்குச் சென்று நல்ல ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மேலதிகாரிகள் விரும் பினர். ஆனல், அம்மையார் அதற்கு மனம் இசைந்தால் தானே! அவரோ போர் வீரர்களுக்குத் தாயாக விளங்கினுர். அத்தாய்மை நெஞ்சம் தனக் காக எவ்வின்பத்தையும் பெற விரும்பவில்லை. அவர் மீண்டும் ஸ்குடாரிக்குத் திரும்பிச் சென்ருர்; சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டார். பின்னர் பழையபடி அவர் மனம் பணியில் ஈடுபட்டது.

இதற்குள் போர் ஒருவாறு முடிந்தது. இரஷ் யர்களுக்கு அரணுக விளங்கிய செபஸ்தபோல் இராணுவக் கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப் பற்றிக் கொண்டனர். இரஷ்யர்கள் போரில் தோல்வி அடைந்தனர். இங்கிலாந்து வீரர்கள் வெற்றிவிழாக் கொண்டாடினர். போர் முடிந்ததும்

வீரர்கள் பலர் கப்பலில் தாயகம் திரும்பினர். அம்மையார் மீண்டும் சில நாட்கள் ஸ்குடாரி மருத்துவ விடுதியிலேயே தங்கிக் காயம்பட்டுப் படுக்கையில் கிடந்த வீரர்களுக்குப் பணி புரிந்தார்.

போர் நின்று சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதும் மருத்துவ விடுதிகள் மூடப்பட்டன. மேலதிகாரிகளும் மருத்துவர்களும் தாய்நாட்டிற்குத் திரும்பினர். அம்மையாரும் தம் தாதியர்களுடன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார்.

இங்கிலாந்தில் அம்மையாருக்குப் பெரிய வரவேற்புக் காத்துக்கொண்டிருந்தது. அரசாங்கம் போர்வீரர்களை அணிவகுத்து நிறுத்தி வரவேற்புத் தரக் காத்து நின்றது. முக்கியமான தெருக்கள் எல்லாம் அலங்கரிக்கப்பட்டன. அம்மையாரின் வீட்டுக்கு முன்னர் அவரை வரவேற்க நண்பர்களும் உறவினர்களும் காத்து நின்றனர். நகரத்தின் முக்கியமான பெரியவர்கள் எல்லாரும் அவரை வரவேற்க வந்திருந்தனர். இந்தக் காட்சியைக் கண்டுகளிக்க அம்மையாருடைய தாயாரும் தந்தையாரும் காத்து நின்றனர். ஆனல், அம்மையாரோ யாருடைய கண்ணுக்கும் தட்டுப்படவில்லை. அவர் கறுப்புப் போர்வையால் தம் உடம்பை மறைத்துக் கொண்டு பின் பக்கத்து வழியாக வீட்டுக்குள் நுழைந்துவிட்டார். முதலில் அவரை வரவேற்கும் பேறு அவ்வீட்டு வேலைக்காரனுக்குக் கிடைத்தது; அம்மையாருடைய உள்ளம் எப்போதும் எளிமை

யினையே விரும்பியது. அதனால் அவர் ஆடம்பர மான வரவேற்பை விரும்பவில்லை.

அம்மையாரது அரும்பெருஞ் சேவைகள் விக்டோரியாப் பேரரசியார் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. பேரரசியார் அம்மையாரைத் தம் அரண்மனைக்கு அழைத்துச் சிறப்புச் செய்தார்; பெரும் மதிப்பு வாய்ந்த மார்பில் அணியத்தக்க அணி ஒன்றும் பரிசாக வழங்கினார். அவ்வணி உயர்ந்த பசும் பொன்னால் செய்யப்பட்டதாகும். அதன்மீது நவரத்தினங்களும் இழைக்கப்பட்டிருந் தன. விலை மதிக்கமுடியாத வைரக் கற்களால் அம்மையாரின் சேவை அதில் குறிக்கப்பட் டிருந்தது.

இங்கிலாந்தில் இருந்த பல்வேறு மன்றங்களும் கழகங்களும் அம்மையாரைத் தம் உறுப்பினராகப் பெற விழைந்தன. பொதுக்கழகங்களுக்கும், அற நிலையங்களுக்கும் அம்மையாரின் பெயரைச் சூட்டி மக்கள் மகிழ்ந்தனர். இதனால் பெருமை பெற்றவர் அம்மையார் அல்லர்; அக் கழகங்களும் அறநிலையங் களுமே. விளக்கினை ஏந்திக்கொண்டு இருப்பது போன்ற அம்மையாரின் சிலைகள் இங்கிலாந்து மக்களின் வீடுகளை அலங்கரித்தன. கடலில் மிதந்த கப்பல்கள் அம்மையாரின் பெயரைத் தாங்கிக் கொண்டு மிதந்தன. இவருடைய புனிதமான திருப் பெயரைப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குச் சூட்டி மகிழ்ந்தனர். அரசாங்கம் அம்மையாருக்கு

'ஆர்டர் ஆப் மெரிட்' என்ற உயர்ந்த பட்டத்தை வழங்கியது. இத்தகைய உயர்ந்த சிறப்பினைப் பெற்ற முதல் பெண்மணியார் அம்மையாரே ஆவார்.

இவ்வாறு அம்மையாருக்குப் பட்டங்களும், பரிசுகளும் வந்து குவிந்தவண்ணமாய் இருந்தன. இவரைப் புகழ்ந்து எழுதாத நாளிதழ்களே இல்லை எனலாம். இவை குறித்து அம்மையார் எவ்விதப் பெருமையும் அடையவில்லை. அவர் என்றும் போலவே அமைதியாயும் அடக்கமாயும் இருந்து வந்தார். தாய்நாடு திரும்பிய அவர் சுகாதார வளர்ச்சிக்காகப் பற்பல பணிகளைச் செய்தார்; தாதியர் பயிற்சி நிலையங்கள் பலவற்றை நிறுவிச் செவ்வனே நடைபெறும்படி செய்தார்; தாதியர் முன்னேற்ற வாழ்விலும் அக்கறை காட்டினர்; அதற்காகத் தாதியர் சங்கம் ஒன்றையும் நிறுவினர்; தாதியர்களுக்குப் பயன்படக்கூடிய நல்ல நூல் ஒன்றும் எழுதி வெளியிட்டார். இந்நூல் பேரறிஞர் களின் பாராட்டுதலைப் பெற்றது. மேலும், அவர் சுகாதார வளர்ச்சிக்குப் பயன்படும் நூல்கள் பலவற்றை எழுதி உலகுக்கு வழங்கினர். மனித குலத்தின் நல்வாழ்வுக்காக அரும்பெருந் தொண் டாற்றிய அம்மையார் தம்முடைய தொண்ணூருவது வயதில் காலமானர். இச்செய்தி கேட்டு உலகமே கண்ணீர் வடித்தது.

2. கியூரி அம்மையார்

மனித இனத்திற்குத் தொல்லைதரும் நோய்கள் பல. அறிவியல் அவற்றை எதிர்த்துப் போராடி வருகின்றது; வெற்றியும் கண்டு வருகின்றது. ஒரு காலத்தில் காலரா, பிளேக், அம்மை போன்ற நோய்கள் கொள்ளை நோய்களாகக் கருதப்பட்டன. இவற்றின் பெயர்களைச் சொல்ல வாய் நடுங்கும்; நினைக்க மனம் அஞ்சும். ஆனால், இன்றோ அறிவியல் இவற்றை வென்று விட்டது. இன்னும் எத்தனையோ நோய்களைத் தீர்க்க அறிவியல் பெருந்துணை செய்கிறது. புற்று நோய் என்று ஒரு நோய்! இந்நோய் மிகவும் கொடுமை வாய்ந்தது. இக்கொடிய நோயை முளையிலேயே கிள்ளி எறிந்து மக்கள் உயிரைக் காப்பாற்ற ஓர் அரும்பொருள் உள்ளது. அதுவே ரேடியம் என்பதாகும். இந்த அமுதம் போன்ற பொருளைக் கண்டுபிடித்து உலகிற்கு வழங்கியவர்கள் யார் தெரியுமா? மேரி கியூரி அம்மையாரும் அவர்தம் அருமைக் கணவரும் ஆவார்கள். அவர்களுடைய சுவை மிகுந்த வரலாற்றினை இங்குக் காண்போம்.

கியூரி அம்மையார் போலந்து நாட்டின் தலைநகராகிய வார்சாவிலே பிறந்தார். இவருடைய தந்தையாராகிய ஸ்கிலொடாவ்ஸ்கா ஆசிரியராய் இருந்தார். தாயாரும் ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணி புரிந்தார். எளிய குடும்பத்திலே

தோன்றிய கியூரி அம்மையார் செல்லமாகவே வளர்ந்து வந்தார். அதற்குக் காரணம் இவர் அக் குடும்பத்தின் கடைசி மகவு. இவருக்குப் பிரோனியா, ஜோஷியா, ஹெலா என்னும் மூன்று தமக்கையர் களும், ஜோசப் என்னும் ஓர் அண்ணனும் இருந் தனர். உடன்பிறந்தார்களும் இவரைச் செல்லத் தங்கையாகவே பேணி அன்பு பாராட்டி வந்தனர். இவர் இளஞ் சிறுமியாய் இருக்கும்போதே தமக்கை யருள் ஒருத்தியான ஜோஷியாவும், அருமைத் தாயாரும் இவ்வுலகைவிட்டு மறைந்தனர்.

கியூரி அம்மையார் இளம் வயதிலேயே அறிவுக் கூர்மை உடையவராய் விளங்கினர். இவருடைய அறிவின் நுட்பத்தைக் கண்டு பெற்றோரும் உடன் பிறந்தார்களும் வியப்பெய்தினர். ஆறு வயதும் நிரம்பாத சிறுமி படிக்க ஆரம்பித்தால் முழுக்க முழுக்க அதிலேயே மூழ்கிவிடுவாள். அப்பொழுது தந்தையின் கட்டளேயோ தமக்கையரின் அழைப்போ அவர் காதில் நுழையவே நுழையாது. இத்தகைய நிலேத்த கவனமே பிற்காலத்தில் இவருடைய வெற்றிக்குத் துணைபுரிந்தது.

அந்நாளில் போலந்து இரஷ்யாவுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தது. ஆதலால் பள்ளியில் இரஷ்ய மொழிக்கே முதலிடம் தரப்பட்டது. போலிஷ் மொழி இரகசியமாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. கியூரி அம்மையார் இரண்டு மொழிகளேயும் நன்கு கற்று நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர்.

வகுப்பில் படித்த எல்லா மாணவியர்களையும்விடக் கியூரி அம்மையாரே வயதில் மிகவும் இளையவராய் இருந்தார். ஆனல், எல்லாப் பாடங்களிலும் இவரே முதலாமவராக இருந்தார். இதனல் ஆசிரியர்கள் அனைவரும் இவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

கியூரி அம்மையாரின் தந்தையார் அறிவியல் ஆசிரியராகப் பணி புரிந்துவந்தார். அவர் மாணவர்களுக்கு அறிவியலை ஆர்வத்துடன் கற்பித்து வந்தார்; வீட்டிலேயே ஓர் அறையில் சிறிய சோதனைக் கூடமும் வைத்திருந்தார். அவ்வறையில் அறிவியல் ஆராய்ச்சிக்கு வேண்டிய பல பொருள்கள் இருந்தன. இவருடைய தந்தையார் அவ்வறையில் அடிக்கடி ஆராய்ச்சிகள் பல செய்து பார்ப்பார். அப்பொழுதெல்லாம் அவர் மணிக்கணக்கில் அமர்ந்து ஏதேனும் செய்துகொண்டிருப்பார். கியூரி அம்மையார் தந்தையின் அருகில் அமர்ந்து கொண்டு கருத்துடன் அவற்றை யெல்லாம் கவனிப்பார். ஒரு நாள் இவர் தம் தந்தையாரை நோக்கி, "அப்பா இவையெல்லாம் என்ன? எதற்காக வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர், "இவையெல்லாம் ஆராய்ச்சிக் கருவிகள். பௌதிகக் கலை பற்றி ஆராய்ச்சி நடத்த வைத்துள்ளேன்" என்று கூறினர்.

பௌதிகக் கலை என்றல் என்ன என்பது அப்பொழுது கியூரி அம்மையாருக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆயினும் அச்சொற்கள் அவரது

உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டன. அச்சொற்களை அவர் பலமுறை சொல்லிச் சொல்லி மகிழ்வார். பிற்காலத்தில் ஆராய்ச்சித் துறையில் மேன்மை யுற்று விளங்கியதற்குக் காரணம் அவர் உள்ளத்தில் மறைந்துகிடந்த ஆற்றலே ஆகும். அவ்வாற்றலே அவருடைய வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுத்துவிட்டது.

கியூரி அம்மையார், உயர்நிலைப் பள்ளியில் பயின்ற காலத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவியராகத் திகழ்ந்தார். இவர் தம்முடைய பதினைன்காம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டார். பள்ளி இறுதித் தேர்வில் எல்லாரைக் காட்டிலும் இவர் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தார். அதன் பயனைகப் பொற் பதக்கம் ஒன்றை இவர் பரிசாகப் பெற்றார். மகளுடைய அறிவின் திறத்தைக் கண்ட தந்தையார் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

கியூரி அம்மையார் கல்லூரிக்குச் சென்று படிக்க விரும்பினர். ஆனல், அதற்கேற்ற வசதி இருக்கவில்லை. தந்தையார் ஆசிரியப் பணியி லிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அவருக்குக் கிடைத்துவந்த உதவித் தொகை, குடும்பத்தை நடத்துவதற்கே போதாமல் இருந்தது. இந்நிலையில் அவர் எவ்வாறு தம் மகளைக் கல்லூரிக்கு அனுப்பிப் படிக்கவைக்க இயலும்? கியூரி அம்மையாரின் அண்ணன் ஜோசப் மட்டும் எப்படியோ மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்து முடித்துவிட்டான்.

இவருடைய தமக்கையருள் ஒருத்தி ஹெலாவும் இசைப் பயிற்சியில் தேர்ந்து ஆசிரியப் பணியில் அமர்ந்து விட்டாள். பிரோனியாவும் கியூரி அம்மை யாரும் மட்டும் உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் நின்றுவிட்டனர். இருவரும் மேலும் படிக்கவேண்டும் என்னும் ஆசையில் மூழ்கிக்கிடந்தனர்.

எப்படியேனும் கல்லூரியில் சேர்ந்து படித்தாக வேண்டும்! இதுதான் கியூரி அம்மையாரின் குறிக் கோளாய் இருந்தது. அக்காலத்தில் பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கு வார்சாவில் வசதி இருக்கவில்லை. வார்சாப் பல்கலைக் கழகம் பெண் களைச் சேர்த்துக்கொள்வதில்லை. ஆகவே, இவர் பாரிசு சென்று அங்குள்ள பல்கலைக் கழகத்தில் கணிதமும் அறிவியலும் பயில ஆசைப்பட்டார். இதுபோலவே பிரோனியாவும் பாரிசு சென்று மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயின்று டாக்டராக விரும்பினர். இருவருடைய ஆவலும் ஈடேறுவதற்குக் கியூரி அம்மையார் ஒரு வழி கண்டுபிடித்தார். அதன்படி பிரோனியா முதலில் பாரிசு சென்று கல்வி கற்கவேண்டும். கியூரி அம்மையார் சிறுவர் சிறுமியர்கட்குத் தனிப்பட்ட முறையில் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும்; அதனால் கிடைக்கும் ஊதியத்தை அக்காளின் படிப்புக்குத் தந்து உதவவேண்டும். பிரோனியா இவ்வாறு படித்து முடித்து வேலையில் அமர்ந்ததும் தன் தங்கையின் படிப்புக்கு உதவ வேண்டும். இதுதான் அவ்விள நெஞ்சம் வகுத்த திட்டம்!

கியூரி அம்மையாரின் திட்டத்தைக் கேட்ட பிரோனியாவின் நெஞ்சம் முதலில் ஒருகணம் திகைத்துவிட்டது. அவர் தம் தங்கையின் உயர் பண்பை எண்ணி எண்ணி உள்ளம் மகிழ்ந்தார். தந்தையும் இத்திட்டத்திற்கு உடன்பட்டார். சிறு தொகையுடன் பிரோனியா பாரிசுக்குப் பயணமானர்.

கியூரி அம்மையாருக்கு இதுமுதல் பொறுப்புக் கள் அதிகம் வந்து சேர்ந்தன. இல்லப் பணிகள் அனைத்தையும் இவரே கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் தன் அக்காளுக்குப் பொருள் ஈட்டி அனுப்பியாகவேண்டும். அதற்காக இவர் செல்வர்களின் வீடுகளுக்குச் சென்று குழந்தை களுக்குப் பாடம் சொல்லிவந்தார்; வார்சா நகரில் மட்டுமின்றிக் கிராமங்களுக்கும் சென்று கற்பித்து வந்தார். இதனல் இவர் அடைந்த தொல்லைகள் பல. கரடுமுரடான பாதைகளில் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. மழையிலும் பனியிலும் நனைய வேண்டியிருந்தது. இப்படி இவர் பல நாட்கள் ஓயாது உழைத்தார்; இதற்கிடையில் தம்முடைய அறிவை வளர்த்துக் கொள்வதற்காக இரவில் நீண்ட நேரம் படித்தார்; அரிய உழைப் பின் மூலம் விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் நல்ல அறிவு வளர்ச்சி பெற்றுவிட்டார். ஆம், பல்கலைக் கழகப் படிப்பிற்குத் தம்மைத் தகுதி ஆக்கிக் கொண்டிருந்தார்.

பாரிசிலிருந்து பிரோனியா அனுப்பிய கடிதமொன்று கியூரி அம்மையாருக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தந்தது. அக்கடிதம் இவருக்குப் புது வாழ்வை அளிப்பதாய் இருந்தது. இவர் அக் கடிதத்தைப் பலமுறை படித்துப் பார்த்தார். படிக்குந் தோறும் படிக்குந்தோறும் நாவினித்தது; உள்ளம் இனித்தது.

அக்கடிதத்தில் பிரோனியா இனிமேல் தான் தங்கைக்கு உதவ முடியும் என்று குறிப்பிட்டிருந்தாள்; அத்துடன் தான் தன்னுடன் படித்து வந்த செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டதாகவும் எழுதியிருந்தாள்.

கியூரி அம்மையார் மேலும் கொஞ்ச காலம் தனியாசிரியர் தொழில் புரிந்து கையில் பொருள் சேர்த்துக்கொண்டு பாரிசுக்குப் புறப்பட்டார். பிரோனியாவும் அவருடைய கணவரும் கியூரி அம்மையாரை வரவேற்று வேண்டிய உதவிகளைச் செய்தனர். கியூரி அம்மையார் சர்போன் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்று வந்தார். தன்னுடைய வீட்டிலேயே தங்கிப் படிக்கும்படி பிரோனியா இவரை வேண்டிக் கொண்டாள். இவரும் முதலில் அவ்வாறே செய்து வந்தார். ஆனால், அவ்வீட்டிற்கும் கல்லூரிக்கும் தொலைவாக இருந்தது. அதனால் நாள் தோறும் கல்லூரிக்குச் செல்வதற்குத் தொல்லையாய் இருந்தது. அன்றியும் சகோதரியின் இல்லம் மருத்துவ இல்லம். அங்கே நாள்தோறும் பிணியாளர்கள்

வந்து கொண்டே இருந்தனர். இத்தகைய இடத்தில் எவ்வாறு மனத்தை ஒருநிலைப்படுத்திக் கல்வி கற்க முடியும்? எனவே, கியூரி அம்மையார் கல்லூரிக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார். அவ்வறை போதுமான வசதி உடையதாய் இல்லை. நல்ல காற்றுக்கும் அவ்வறைக்கும் தொடர்பே இல்லை. போதிய ஒளியும் அங்கு இல்லை. இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் அம்மையார் ஊக்கத்துடனும் உறுதியுடனும் படித்து வந்தார்.

இவருடன் பயின்ற தோழியர்கள் நன்கு உடுத்தி ஆடம்பரமாகக் கல்லூரிக்கு வந்தனர். இவரோ எளிய உடையில் வந்தார். அவர்களோ சுவையான சத்துக்குறையாத உணவுகளை வயிறார உண்டு வந்தனர். இவரோ எளிய உணவை அரை வயிறே உண்டு வந்தார்; மிகவும் சிக்கனமாகச் செலவு செய்தார். இவர் பௌதிகம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் பட்டம் பெற விரும்பினார். அதற்காக இரவு பகலாக அரும்பாடுபட்டு உழைத்தார். உழைப்போ கடினமான உழைப்பு. அவ்வாறு உழைத்த உடலுக்கு இவர் தந்த ஓய்வோ குறைவானது; உணவோ பற்றாதது; சத்து இல்லாதது. இந்நிலையில் இவரது உடல் எப்படி நலமுடையதாய் இருக்கும்? சில சமயங்களில் இவர் மயக்கம் அடைந்து வீழ்ந்துவிடுவார். இதனை அறிந்த தமக்கை பிரோனியா இவரைத் தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்று வேண்டிய

சிகிச்சைகளைச் செய்தாள்; நல்ல சத்தான உணவினை வேளை தவறாமல் உண்ணும்படி செய்தாள். அதன் பயனாய்க் கியூரி அம்மையார் விரைவில் குணம் அடைந்தார்; மீண்டும் கல்வியில் தீவிர கவனம் செலுத்திக் கற்றார்; பௌதிகத்தில் எல்லா மாணவர்களைக் காட்டிலும் சிறப்பாய்த் தேறி உயர்ந்த பட்டம் பெற்றார்; அதற்கு அடுத்த ஆண்டில் கணிதத்திலும் பட்டம் பெற்றார்.

பிரான்சு அரசாங்கம் அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சிக்கு உதவி புரிந்து வந்தது; அத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு உதவித் தொகை வழங்கி ஊக்குவித்தது; கியூரி அம்மையாரது அறிவின் திறத்தினைப் பாராட்டி உதவித் தொகையாக அறுநூறு ரூபிள்கள் அவருக்கு வழங்கியது. இதனால் இவரது பொருட்குறை ஒருவாறு நீங்கியது. அம்மையார் தொடர்ந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இவர் காலத்தில் பாரிசு மாநகரத்தில் அறிவியல் ஆராய்ச்சித் துறையில் வல்லுநர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் பியரி கியூரி என்பதாகும். அவர் ஒரு கல்வி நிலையத்தில் பௌதிக-இரசாயனப் பேராசிரியராய் இருந்துவந்தார். அந்நாளில் அவர் புகழ் எங்கும் பரவியிருந்தது.

கியூரி அம்மையாருக்கு அவருடைய நட்புக் கிடைத்தது. அறிவியல் இருவருடைய உள்ளத்தையும் ஒன்றுபடுத்தியது. இருவரும் அறிவியல் தொடர்பான எத்தனையோ செய்திகளை மனம்

விட்டுப் பேசினர்; ஒருவரை ஒருவர் ஆராய்ச்சியில் மிஞ்சி நின்றனர். ஓராண்டுக்குள் இருவரும் கணவன் மனைவியராய் மாறினர்.

கியூரி அம்மையார் ஆராய்ச்சியில் மட்டும் இன்றிக் குடும்பத்தைக் கவனிப்பதிலும் தலைசிறந்து விளங்கினர். கணவருக்கு வேண்டிய உணவினை அவரே சமைத்துப் படைத்தார்; உடைகளையும் தூய்மை செய்து கொடுத்தார். இத்தனை பணிகளுக்கு இடையிலும் இவர் ஆராய்ச்சியினைக் கைவிடவில்லை. இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிவியல் வல்லுநர்கள் ஏற்றுக்கொண்டு இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினர். ஆராய்ச்சித் துறையில் டாக்டர் பட்டம் பெறுவது என்பது எளிதான செயல் அன்று. உயர்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதித் தான் இப்பட்டம் பெற வேண்டும். இவர் தம்முடைய ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்ட பொருள் ரேடியம் ஆகும். அதனைக் கண்டுபிடிப்பதற்கு இவர் பட்டபாடு சொல்லுந் தரமன்று.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த பெக்யூரல் என்னும் அறிவியல் வல்லுநர் யுரேனியம் என்னும் உப்புக்களை ஆய்ந்து பார்த்து ஓர் உண்மையை வெளியிட்டிருந்தார். யுரேனிய உப்புக்களிலிருந்து ஒளிக்கதிர்கள் வெளிவருகின்றன என்றும், அக் கதிர்கள் காகிதம், அட்டை போன்ற பொருள்களை ஊடுருவிச் செல்லும் அற்புத ஆற்றல் பெற்றவை என்றும் அவர் கண்டறிந்து வெளிப்படுத்தினர். இவ் வாராய்ச்சி பற்றிப் பல கட்டுரைகள் அவர்

எழுதி வெளியிட்டிருந்தார். அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கியூரி அம்மையாரும் அவர்தம் கணவரும் ஆர்வத்துடன் படித்தனர்.

இடைவிடாத ஆராய்ச்சியின் பயனைப் மேலும் பல உண்மைகளை அவர்கள் கண்டறிந்தனர். யுரேனிய உப்புக்கள் மட்டும் அத்தகைய ஒளிக்கதிர்களை வெளியிடவில்லை. யுரேனியம் கலந்த மற்றப் பொருள்களும் அவ்வாறே ஒளிக்கதிர்களை அள்ளி வீசின. இவ்வுண்மையை அறிந்த கியூரி அம்மையார் ஊக்கத்துடன் ஆராய்ச்சியில் நாட்டம் செலுத்தினர். இவர் பழுப்பு நிறத் தார்க் கட்டிகளைக் காய்ச்சி ஆராய்ந்தார்; அவற்றில் ஆற்றல் வாய்ந்த ஒரு பொருள் இருப்பதனையும் கண்டறிந்தார்; அந்தப் புதுப் பொருளுக்கு ரேடியம் என்னும் பெயரினையும் சூட்டி மகிழ்ந்தார்; இது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டார்.

அறிவியல் அறிஞர்கள் இவருடைய கட்டுரைகளை விரும்பிப் படித்தனர். "ரேடியம் என்று ஒரு பொருளா? அதனை எங்கள் கண்முன்னே காட்ட வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் இவ்வாராய்ச்சியினை ஏற்றுக்கொள்ள முடியும்" என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

கியூரி அம்மையார், அவர்களுடைய கூற்றைக் கேட்டுத் திகைத்துவிடவில்லை. இப்படி ஒரு கேள்வி எழும் என்பது அவருக்கு முன்கூட்டியே தெரியும். அவர் மேலும் ஆய்ந்து ரேடியத்தைப் பிரித்து

எடுப்பது என்று முடிவு செய்தார். அவருடைய கணவரும் இவருடைய ஆவலை நிறைவேற்ற உடனிருந்து உழைக்க முடிவு செய்தார்.

ஆனல், இச்செயல் எளிமையான செயல் அன்று. ஓர் அரிசி அளவுள்ள ரேடியத்தைப் பெற வேண்டும் என்ருல், டன் கணக்கான தார்க் கட்டிகளைக் காய்ச்சியாக வேண்டும். இந்த ஏழை அறிவியற் செல்வர்கள் டன் கணக்காகத் தார்க்கட்டிகளைப் பெற எங்கே போவர்? ஆராய்ச்சிக்கு நல்ல சோதனைக்கூடம் அமைக்க வேண்டும். அதற்குப் பொருள் வேண்டுமே! இவர்கள் பாரிசுப் பல்கலைக் கழகத்தாரை அணுகித் தம் வேண்டுகோளைத் தெரிவித்தனர். ஆனல், அவர்கள் முதலில் இவர்களுடைய வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டனர்; மீண்டும் மீண்டும் பன்முறை வேண்டிக் கொண்டனர். இறுதியில் பல்கலைக் கழகத்தார் ஒரு பழுதுபட்ட கட்டிடம் ஒன்றினை வழங்க முன்வந்தனர். அதனை இவர்கள் ஏற்றுக்கொண்டு சோதனையைத் தொடங்கினர்.

ஆஸ்திரிய அரசாங்கம் தார்க் கலவைக் கட்டிகளை இவர்களுக்கு இலவசமாக வழங்கியது. அவற்றை இவர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே வரவழைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. சிக்கனமாக வாழ்ந்து சிறிதளவு சேமித்து வைத்திருந்த பொருளையும் இவர்கள் இதற்காகச் செலவிட்டனர்.

சோதனைக் கூடத்தில் தார்க் கலவைக் கட்டிகள் வந்து இறங்கின. அவற்றை உலையிலிட்டுக்

காய்ச்சி இருவரும் ஆராய்ச்சி நடத்தினர். சற்றேறக் குறைய இப்படி இடைவிடாமல் நான்கு ஆண்டுகள் ஆராய்ச்சி நடந்தது. இறுதியில் இவர்கள் ரேடியத்தைப் பிரித்து எடுத்தே விட்டனர்; ஒரு டெசி கிராம் அளவுள்ள ரேடியத்தைச் சேர்த்து முடித்தனர். கியூரி அம்மையார் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்த கவலை தீர்ந்தது. 'ரேடியத்தைக் கண்ணெதிரே காட்டவேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் இந்த ஆராய்ச்சியினை ஏற்றுக்கொள்ள முடியும்' என்று கூறிய அறிவியலறிஞர்கள் இப்பொழுது பேசாமல் இவர்கள் ஆராய்ச்சியினை ஏற்றுக் கொண்டனர்; மனமாரப் பாராட்டி மகிழ்ந்தனர். கியூரி அம்மையார் ரேடிய அலைகளைப் பற்றிப் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். ஆராய்ச்சி வல்லுநர்கள் அக்கட்டுரைகளை ஏற்றுக் கொண்டு இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினர்.

நாளடைவில் ரேடியத்தின் பெருமை எங்கும் பரவியது. பொன்னைக் காட்டிலும் ரேடியம் மதிப்பு வாய்ந்தது. இப்பொருள் மருத்துவத்துறையில் விண்ணவர் அமுதமென மதித்துப் போற்றப்படுகிறது. புற்றுநோய் என்பது ஒரு கொடிய நோயாகும். அக் கொடிய நோயினை நீக்குவதற்கு இது கைகண்ட மருந்தாக இன்று விளங்குகிறது. ரேடியம் புகைப்படத் தொழிலிலும் பல மாறுதல்களை உண்டாக்கியுள்ளது.

பிரான்சு அரசாங்கம் இவர்களுடைய பெருமையை உணர்ந்தது. பல்கலைக் கழகம் இவர்கள்

இருவரையும் போற்றிப் புகழ்ந்தது; பியரி கியூரிக்குப் பேராசிரியர் பதவி வழங்கியது. அவருக்கு அரசாங்கம் ஆய்வுக்கூடம் ஒன்றையும் அமைத்துத் தந்தது. அவரே அந்த ஆய்வுக் கூடத்தின் தலைவராய் இருந்து வந்தார். கியூரி அம்மையார் அவருக்கு உதவியாளராக இருந்து வந்தார்.

இவர்களுடைய வாழ்வு வளம் பெற்றது. புகழும் பரிசுகளும் இவர்களை நாடிவந்தன. ரேடியம் பிரித்தெடுக்கும் முறையை வெளியிடாமல் இவர்கள் தங்கட்கே உரிமை ஆக்கி இருந்தால், அதன்மூலம் நிறையச் செல்வம் ஈட்டியிருக்கலாம். ஆனால், இவர்கள் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. ரேடியம் மனித குலத்தின் வாழ்விற்குப் பயன்படக்கூடியதாய் இருந்தது. ஆகையால், அதனை வைத்துப் பொருள் ஈட்டி வாழ அம்மையார் மனம் இசையவில்லை. என்னே அம்மையாருடைய உயர்ந்த பண்பு!

பியரி கியூரி ஒருநாள் பாரிசு நகர வீதியில் நடந்து கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக வண்டி ஒன்று அவர் மீதேறி உயிரைக் கவர்ந்து சென்றது. அந்தோ! உலகை வாழ்விக்க வந்த வள்ளல் மறைந்தார்! கியூரி அம்மையார் கண்ணீர் விட்டுக் கதறினர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த அறிவியல் வல்லுநர்கள் மனம் வருந்திக் கண்ணீர் சிந்தினர். அரசியல் தலைவர்களிடமிருந்தும் அறிவியல் வல்லுநர்களிடமிருந்தும் கியூரி அம்மையாருக்கு அனுதாபச் செய்திகள் வந்து

குவிந்தவண்ணமிருந்தன. கியூரி அம்மையார் நெஞ்சம் தேறுவதற்குப் பல நாட்கள் ஆயின.

பியரி கியூரி ஆரம்பித்து வைத்த ஆய்வுக் கூடம் தலைவர் இல்லாமல் வாடி நின்றது. அரசாங்கம் கியூரி அம்மையாரே அப்பதவிக்குத் தக்கவர் என்று எண்ணி, அவரை நியமித்தது. ஆராய்ச்சியில் வேட்கை கொண்ட அவரது மனம் விரும்பி அப்பதவியினை ஏற்றுக் கொண்டது. கணவர் விட்டுச் சென்ற பணியை இவர் தொடர்ந்து நடத்தி வந்தார். இவரே சர்போன் கல்லூரியின் பேராசிரியையாகவும் இருந்து வந்தார்.

அம்மையாருடைய கணவர் மறைந்த பின்னர் இவருக்குப் பொறுப்புக்கள் அதிகம் வந்து சேர்ந்தன. இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தனர். அவர்களை நன்முறையில் பேணி வளர்க்க வேண்டியிருந்தது. எத்தனை பொறுப்புக்கள் இருந்தபோதிலும், எத்தனை தொல்லைகள் வந்து குவிந்தபோதிலும், இவர் ஒருபோதும் ஆராய்ச்சியில் சலிப்பு அடைந்ததில்லை. மேலும் இவர் ரேடியத்தைப் பற்றி இடைவிடாமல் ஆராய்ச்சி செய்தார்; பலப்பல உண்மைகளைக் கண்டறிந்தார்; ரேடியம் அலைகளைப்பற்றி ஆய்ந்து அரியதொரு நூலை வெளியிட்டார். அந்நூல் அறிவியல் வல்லுநர்கள் பலருடைய பாராட்டுதலைப் பெற்றது. சுவீடன் நாட்டு அறிவியற் கழகம் இவருடைய இரசாயன ஆராய்ச்சியின் திறனைப் பாராட்டி நோபல் பரிசை

நல்கியது. ரேடியம் கண்டுபிடித்தபோதே அக் கழகம் அம்மையாரையும் அவருடைய கணவரையும் பாராட்டி நோபல் பரிசு வழங்கி இருந்தது. இப் பரிசு மிகவும் உயர்ந்ததாகும். இத்தகைய உயர்ந்த பரிசை அம்மையார் தம் வாழ்வில் இரண்டுமுறை பெற்றது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

கியூரி அம்மையாருக்கு நீண்ட நாட்களாகவே ஓர் ஆசை இருந்து வந்தது. வசதியான காற் றோட்டம் அமைந்த ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவ வேண்டும் என்பதுதான் அவ்வாசை. இதுவரை இவருடைய வேண்டுகோளைப்பற்றி அக்கறை கொள்ளாத பிரான்சு அரசாங்கம், இப்பொழுது அக்கறை கொண்டது. அம்மையாரின் வேண்டு கோளுக்கிணங்கி அழகானதோர் ஆய்வுக் கூடத்தை அமைத்துத் தந்தது. இந்த ஆய்வுக் கூடத்தில் இளம் அறிவியல் மாணவர்கள் பலர் சேர்ந்து ஆராய்ச்சி புரிந்து வந்தனர். மருத்துவர்கள் பலர் புற்று நோயைக் குணப்படுத்துவதற்கு ரேடியம் எவ்வாறு பயன்படும் என்று ஆராய்ச்சி நடத்தினர். தாமும் தம் கணவரும் அரும்பாடுபட்டு உழைத்துச் சேர்த்து வைத்திருந்த ரேடியத்தைக் கியூரி அம்மையார் இவ்வாராய்ச்சி நிலையத்திற்கு அன் பளிப்பாக வழங்கிவிட்டார். அவருடைய அருள் மிகுந்த உள்ளத்தை எவ்வாறு பாராட்டுவது! எம் மொழியால் புகழ்வது!

ஆனல், எதிர்பாராத விதமாக ஆய்வுக் கூடத்தையே மூட வேண்டிய நிலை ஏற்பட்டது

1914ஆம் ஆண்டில் உலகப் பெரும்போர் மூண்டது. இளம் ஆராய்ச்சி மாணவர்களும், மருத்துவர்களும் சேவை செய்யப் போர்க் களத்தை நோக்கிப் புறப் பட்டனர். ஆராய்ச்சி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இக்காலத்தில் அம்மையார் வாளா இருக்க விரும்பவில்லை. அந்நாளில் போர் முனையி லிருந்த மருத்துவ மனைகளில் 'எக்ஸ்ரே' மருத்துவ முறை கிடையாது. அம்மையார் அக்குறையை நீக்கப் பாடுபட்டார்; செல்வர்களின் உதவியால் நிதியொன்றினைத் திரட்டினர்; திரட்டிய நிதியின் துணைகொண்டு 'எக்ஸ்ரே' கருவிகளை அமைத்தார்; அவற்றைப் போர் முனைக்கு அனுப்பிப் பலர் உயிர் வாழ உதவி புரிந்தார். உலகப் பெரும் போர் முடிந்த பின்னர் ஆய்வுக் கூடம் மீண்டும் திறக்கப் பட்டது. அறிவியல் ஆராய்ச்சியில் வேட்கை கொண்ட பலர் இங்கு வந்து சேர்ந்து ஆய்வு நிகழ்த்தினர்.

கியூரி அம்மையாரின் புகழ் உலகு எங்கும் பரவியது. அமெரிக்கர்கள் இவரைத் தம் நாட்டிற்கு வரவழைத்துச் சிறப்புத்தர விழைந்தனர். அம்மை யாரைப் பேட்டி காண்பதற்காக அமெரிக்காவி லிருந்து மங்கை ஒருவர் வந்தார். அவருடைய பெயர் வில்லியம் பிரவுன் மலோனியா என்பதாகும். மலோனியா சாதாரணமானவர் அல்லர்; புகழ்மிக்க பத்திரிகை ஆசிரியராய் இருந்தார். அவர் அம்மை யாருடைய எளிமையான தோற்றத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்டார். பொன்னினும் உயர்

வான ரேடியத்தை உலகிற்கு வழங்கிய அம்மையார் வாழ்வில் ஆடம்பரம் எள்ளளவும் காணப்படவில்லை. அவர் வாழ்விலும் எளிமை; உடையிலும் எளிமை; பேச்சிலும் எளிமை. செல்வம் கொழிக்கும் நாட்டிலே பிறந்து ஆடம்பரத்திற்கு இடையிலே வாழ்ந்து வந்த மங்கையான மலோனியாவின் உள்ளத்தை இந்த எளிமை வென்றுவிட்டது. ரேடியத்தைக் கண்டு பிடித்த கியூரி அம்மையார் பெருமளவு ரேடியத்தைச் சேர்த்து வைத்திருப்பார் என்று அம் மாதரசியார் எண்ணிவிட்டார் போலும்! அதனால், அவர் கியூரி அம்மையாரை நோக்கி, "தங்களிடம் எவ்வளவு ரேடியம் உள்ளது?" என்று வினவினார். அதற்கு அம்மையார், "என்னிடம் எதுவும் இல்லை; ஒரு கிராம் ரேடியம் இருந்தது. அதனையும் ஆராய்ச்சி நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கி விட்டேன்" என்று கூறினார். அம்மையாரின் அருள் உள்ளத்தை எண்ணி எண்ணி மலோனியா வியந்தார்.

மலோனியா, கியூரி அம்மையாரை அமெரிக்கா விற்கு வருகைதரும்படி வேண்டிக்கொண்டார். அவ்வழைப்பினை அம்மையார் அன்புடன் ஏற்றுக் கொண்டார். கியூரி அம்மையாருக்கு ஒரு கிராம் எடையுள்ள ரேடியம் பரிசளிக்க மலோனியா விரும்பினார். அதற்காக அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்றதும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்; செல்வர்கள் பலரின் துணையால் ஒரு கிராம் எடையுள்ள ரேடியமும் சேர்த்து முடித்தார்; கியூரி அம்மையார் அமெரிக்கா வந்துசேரும் நாளை

ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நாளும் வந்து சேர்ந்தது.

அன்று நியூயார்க் நகரம் முழுவதும் ஒரே பரபரப்பாய் இருந்தது. மக்கள் கூட்டங் கூட்டமாகத் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந் தனர். புகைப்படக் கலைஞர்கள் தங்கள் கருவிகளைத் தாங்கியவண்ணம் காத்து நின்றனர். நாளிதழ்க் குறிப்பு எடுப்பவர்கள் பலர் அம்மையாரைச் சந்திப்ப தற்காகப் போட்டி போட்டுக்கொண்டு காத்து நின்றனர். கப்பல் நியூயார்க்கை அடைந்தது. அம்மையார் அடக்கமே உருவாக இறங்கிவந்தார். அரசாங்க உயர் அதிகாரிகளும், அமைச்சர்களும் கூடிநின்று வரவேற்பு அளித்தனர். ஒரு நாட்டுத் தலைவரின் வருகை போன்று, அம்மையாரின் வருகை சிறப்பிக்கப்பட்டது. அமெரிக்கக் குடியரசு தலைவரின் மாளிகையாகிய வெள்ளை மாளிகையிலும் அம்மையாருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. அமெரிக்க அதிபர் ஹார்டிங் என்பார், அமெரிக்க மக்களின் சார்பில் அம்மையாருக்கு ஒரு கிராம் அளவுள்ள ரேடியத்தைப் பரிசாக வழங் கினர். அந்த ரேடியத்தின் மதிப்போ மிக மிக உயர்வானதாகும். அதனைத் தாமே வைத்திருந்தால் அம்மையார் பெருஞ் செல்வத்தை ஈட்டி இருக்க முடியும். ஆனல், அம்மையார் உள்ளத்தில் சிறி தளவும் அவ்வெண்ணம் அரும்பவில்லை; அதனைப் பாரிசிலிருந்த ஆராய்ச்சி நிலையத்திற்கே வழங்கி வ டார்.

அம்மையார், அமெரிக்க மக்களிடம் பிரியா விடைபெற்றுத் தாய்நாடு திரும்பினார். அம்மையாருக்கு அமெரிக்க மக்கள் அளித்த வரவேற்பை அறிந்த பிரெஞ்சு நாட்டு மக்களும் அம்மையாருக்குச் சிறப்பான ஒரு விழா நடத்திப் பெருமைப்படுத்த விரும்பினர். அதற்கான சமயத்தை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இங்கிலேயில் ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் முழுமை எய்தின. இதனையொட்டிப் பல்கலைக் கழகம் பெருவிழா ஒன்றினை நடத்த எண்ணியது. மக்கள் தங்களுடைய முழுமையான ஆதரவை நல்கினர்.

விழாவில் அம்மையாரைப் பற்றிப் பலர் வானளாவப் புகழ்ந்து பேசினர். அம்மையார் அப்புகழுரைகளுக்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவரே. எனினும், அம்மையார் அப்புகழுரைகளைக் கேட்க நாணமுற்றார். இதுவன்றோ உயர்ந்த பண்பு உடையவர்களின் இயல்பு!

அம்மையாருக்கு ஆண்டுகள் முதிர்ந்தன. அவரது உடலில் தளர்ச்சி ஏற்பட்டது. எனினும் அவர் உள்ளம் தளர்ச்சி அடையவில்லை. வயது முதிர்ந்த காலத்திலும் அவர் தவறாது ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்தார். அவரிடம் இளம் மாணவர்கள் பலர் ஆராய்ச்சி நடத்தி வந்தனர். அம்மையார் அவர்களுடைய கட்டுரைகளை விடாமல் படித்துப் பார்ப்பார்; மாணவர்களுடைய தனித் திறமையைப் பாராட்டி ஊக்குவிப்பார்.

இவ்வாறு இரவும் பகலும் ஓய்வின்றி உழைத்த தன் காரணமாக அம்மையாரின் உடல் வலிமை குன்றியது; கண் பார்வையும் மங்கியது. மருத்துவர்கள் ஓய்வு பெறும்படி அம்மையாரை வற்புறுத்தினர். அம்மையார் தமக்கு ஆராய்ச்சி ஒன்றுதான் மனநிறைவு நல்கக்கூடியது என்று கூறிவிட்டார்; தொடர்ந்து உழைத்தார். அம்மையாரை நோய்கள் தொடர்ந்து துன்புறுத்தி வரலாயின. தமக்கு முடிவுகாலம் விரைவாக வந்துகொண்டிருப்பதை அம்மையார் உணர்ந்துகொண்டார். அப்பொழுதும் அவர் தம்முடைய முடிவைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை; தமக்குப்பின் ஆய்வுக் கூடம் எப்படிச் செயல்படுமோ என்பதைப் பற்றியே கவலைப்பட்டார்.

1934ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் மூன்றும் நாள் இவ்வுலகிற்குப் பெருந் துயர் நல்கக்கூடிய நாளாய் இருந்தது. அறிவியற் கலையின் தவச் செல்வியாய் விளங்கிய கியூரி அம்மையார் அன்றுதான் காலமானார். அவருடைய பூதவுடல் அழிந்துவிட்டது. ஆனால், அவருடைய புகழுடம்பு மனித குலம் இருக்கும்வரை இருக்கும்.

---

3. ஜகதீச சந்திர போஸ்

மரஞ்செடிகொடிகளுக்கும் உயிர் உண்டு; இன்பம் உண்டு; துன்பம் உண்டு. அவையும் உறங்குகின்றன; சோர்வு மிகுந்தபோது தலை சாய்த்து வாடி வதங்கி நிற்கின்றன; களிப்பு மிகுந்தபோது பூத்துப் பொலிந்து நிற்கின்றன. இவ்வுண்மையை முதன் முதலாக அறிவியல் நெறி நின்று உலகுக்கு எடுத்துக் காட்டியவர் ஜகதீச சந்திர போஸ் என்னும் பெரியார் ஆவார். அவருடைய வாழ்க்கை வரலாறு சுவையானது; இளைஞர்க்கும் ஊக்கம் தருவது. அதனை இங்குக் காண்போம்.

போஸ் வங்காள மாகாணத்தைச் சேர்ந்தவர். அவர் பிறந்த இடம் விக்ரம்பூர் என்னும் சிற்றூர் ஆகும். ஆனால், அவர் வளர்ந்ததும், ஆரம்பக் கல்வி கற்றதும் பரித்பூர் என்னும் ஊரிலாகும். காரணம் அவர் தந்தை பகவன் சந்திர போஸ் அங்கு நீதித் துறையில் பணியாற்றி வந்தமையே ஆகும்.

பகவன் சந்திர போஸ் அஞ்சா நெஞ்சம் வாய்ந்தவர். அவர் தம் கடமையைச் செய்வதில் சிறிதும் தவறியது இல்லை. தீமை செய்பவர்கள் அவரிடமிருந்து எப்பொழுதும் தப்பமுடியாது. தீமைக்கு ஏற்ற தண்டனையை அவர் வழங்கியே தீர்வார். அதனால், அவர் சில சமயங்களில்

தொல்லைகளை அடையவேண்டியிருந்தது. அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. ஆனால், அதே நேரத்தில் ஏழை மக்களின் துயரைக் காணும்போது அவர் நெஞ்சம் உருகும். தம்மால் இயன்ற அளவு ஏழைகளுக்கு உதவிசெய்வதனையே அவர் வாழ்வின் குறிக்கோளாய்க்கொண்டு வாழ்ந்து வந்தார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது பழமொழி. அப்பழமொழி ஜகதீச சந்திரபோஸைப் பொறுத்தமட்டில் முற்றிலும் உண்மையாகவே இருந்தது. சின்னஞ்சிறு வயதிலேயே அவர் சிந்திக்கத் தொடங்கிவிட்டார். அன்னை காட்டிய அழகு நிலவு சிந்தைக்கு மகிழ்ச்சி ஊட்டியதோடு மட்டும் நிற்கவில்லை; அவர் உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்களைத் தோற்றுவித்தது. பாட்டி தந்த மரப்பாவை அவருக்கு விளையாட்டுப்பொருளாக மட்டும் அமையவில்லை; சிந்தனைப் பொருளாகவும் அமைந்தது.

பகவன் சந்திரபோஸ் மாலையில் தம் அலுவலகத்திலிருந்து வீட்டிற்குத் திரும்புவார். அப்பொழுது அவர் பகல் முழுவதும் உழைத்துக் களைத்துப்போய் இருப்பார். சிறுவன் ஜகதீசரைக் கண்டதும் தந்தையின் சோர்வெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். அவர் தம் மகனை மடியில் அமர்த்திக் கொ[illegible]ண்டு அன்புடன் உரையாடுவார். அவ்வமயம் [illegible] ச சந்திர போஸ் தம் தந்தையாரிடம் பற்பல [illegible]ள்விகள் கேட்பார். எல்லாவற்றிற்கும் தந்தையார் [illegible]றுமையாய்ப் பதில் அளிப்பார்.

ஜகதீசர் பள்ளிப் பருவம் அடைந்தார். பெற்றோர்கள் தம் அருமை மகனைப் பள்ளிக்கு அனுப்ப முடிவு செய்தனர். அந்நாளில் ஆங்கில மொழியில் கல்வி கற்பதே உயர்வாக எண்ணப் பட்டது. அப்பொழுதுதான் அரசாங்க வேலை கிடைக்கும் என்றும், செல்வம் சேர்க்க முடியும் என்றும் மக்கள் எண்ணி வந்தனர்.

அப்பொழுது பரித்பூரில் இரண்டு கல்வி நிலையங்கள் இருந்தன. ஒன்று தாய்மொழியிற் கல்வி கற்பித்து வந்தது. இன்னொன்று ஆங்கில மொழியிற் கல்வி கற்பித்து வந்தது. தாய்மொழியில் கல்வி புகட்டிய கல்விநிலையம், ஏழை எளியவர்களின் கல்வி நிலையமாய் இருந்தது. ஆங்கிலக் கல்விநிலையமோ செல்வர்களின் கல்விநிலையமாய் இருந்தது.

பகவன்போஸ், தம் பிள்ளையைத் தாய்மொழி யில் கல்வி புகட்டிய கல்வி நிலையத்திற்கே அனுப் பினார். இளம் வயதிலேயே தம் மகன் தாய்மொழியை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். மேலும் அக்கல்வி நிலையத்தில் ஏழை களே படித்து வந்தனர். அவர்களுள் பலர் உண்ணப் போதிய உணவு இல்லாதவர்கள்; உடுக்க நல்ல உடை இல்லாதவர்கள். அத்தகையவர்களுடன் தம் பிள்ளை கலந்து பயிலவேண்டும் என்று பகவன் போஸ் விரும்பினார். அப்பொழுதுதான் இந்திய[illegible] உண்மை நிலையைத் தம் மகன் நன்கு பு[illegible] கொள்ளமுடியும் என்றும் அவர் எண்ணினர். [illegible]ில்

ஜகதீசர் விரைவில் தாய்மொழியை நன்கு கற்றுக்கொண்டார். தந்தையார் விரும்பியபடியே அவர் ஏழை மாணவர்களோடு உள்ளம் கலந்து பழகினர்; ஆடிப்பாடி மகிழ்ந்தார். அவர் வெறும் புத்தகப் புழுவாய் மட்டும் இருந்துவிடவில்லை; ஓய்வு நேரங்களில் தம் தோழர்களுடன் சேர்ந்து விளையாடி உடல் உரத்தையும் பெற்றுத் திகழ்ந்தார்.

அவர், ஐந்து வயதிலேயே குதிரை ஏறிச் சவாரி செய்யக் கற்றுக்கொண்டார். அவரது உயரத்திற்குத் தகுந்தபடி, தந்தையார் அவருக்கு ஒரு மட்டக் குதிரை வாங்கிக் கொடுத்து இருந்தார். நாள் தோறும் மாலையில் அதன்மீது ஏறி அமர்ந்து அவர் சவாரி செய்வார்.

இவர், ஆரம்பப்பள்ளிப் படிப்பு முடிந்ததும், உயர்நிலைப்பள்ளிப் படிப்பிற்காகக் கல்கத்தாவிற்குச் சென்றார்; உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்ததும், அங்கு உள்ள கல்லூரியில் சேர்ந்து பயின்றார். கல்லூரியில் பி.ஏ., வகுப்பில் அறிவியலைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தார். இவர் படிக்கும்போதே வேட்டையாடுவதில் மிகவும் விருப்பம் உடையவராய் இருந்தார்; விடுமுறை நாட்களில் காடுகளுக்குச் சென்று வேட்டையாடு ார்; சில சமயங்களில் பல நாட்கள்கூடக் காட்டிலேயே தங்கிவிடுவார். இவ்வாறு அறிவினை ளர்ப்பதோடு உடல் வன்மையை வளர்ப்பதிலும் வர் கருத்தினைச் செலவிட்டார்.

இவர் பி. ஏ. படிப்பு முடிந்ததும் இங்கிலாந்து சென்று கல்வி கற்க விரும்பினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிக்குப் பயிலவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. தம் தந்தையாரிடம் இவர் தம்முடைய எண்ணத்தை வெளியிட்டார். ஆனால், பகவன் போஸ் தம்முடைய மகனின் விருப்பத்திற்கு உள்ளம் இசையவில்லை. அவர் தம் மகன் அறிவியலிலேயே மேலும் படித்துச் சிறப்புற வேண்டும் என்றும், தம் மகனின் அறிவியல் அறிவு, பாரத நாட்டின் பயிர்த் தொழில் வளத்திற்குப் பெரிதும் பயன்பட வேண்டும் என்றும் விரும்பினார். அவ்வாறு வர இயலவில்லையேல், நன்கு கற்றுக் கல்வித் துறையில் சிறந்த பேரறிஞராக அவர் விளங்க வேண்டும் என்று தந்தையின் நெஞ்சம் விரும்பியது. பகவன் போஸின் குறிக்கோள் உயர்வானதாய் இருந்தது. அவர் பணத்தைப் பெரிதாய் எண்ண வில்லை; நாட்டின் நலத்தையே பெரிதென எண்ணினார்.

ஜகதீசர் இங்கிலாந்து சென்று கல்வி கற்ப தென்று உள்ளத்தில் உறுதி பூண்டு விட்டார். தந்தையாரும் அதற்கு ஒருவாறு மனம் இசைந்து விட்டார். ஆனால், அந்நேரம் குடும்பத்தில் பொருளா தார நெருக்கடி நிறைந்த நேரமாய் இருந்தது. எதிர்பாராத செலவுகளால் தந்தையார் கடன்பட் நெஞ்சம் கலங்கி இருந்தார். அன்றியும் அது சமய அவர் உடல் நலத்தின் பொருட்டு நீண்ட விடுமுறை பெற்றிருந்தார். அதனால், அவர் குறைந்த ஊதிய

பெற்று வந்தார். இந்நிலையில் பெற்ற மகனின் ஆர்வத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்று தந்தையார் நெஞ்சம் வாடினார்.

தாயும் மனம் வாடினார். 'மகனைப் பிரிந்து எவ்வாறு ஆண்டுக் கணக்கில் வாழ்வது' என்று பெற்ற நெஞ்சம் கரைந்தது. அதே நேரத்தில் அத் தாய உள்ளம் மகனுடைய எதிர்கால வாழ்வையும் எண்ணிப் பார்த்தது. இறுதியில் மகனைக் கல்வி கற்க அனுப்புவது என்று அவ்வம்மையார் முடிவு செய்தார். தம் கணவர் பொருட்குறையால் துன்பப் படுவதையும் உணர்ந்தார். இறுதியாக அவ்வம்மை யார் ஒரு முடிவுக்கு வந்தார். அவர் தம் கையில் சிறிதளவு பணம் சேர்த்து வைத்திருந்தார்; அத்துடன் தம்முடைய பொன் நகைகளையும் விற்று மகனது கல்விக்குச் செலவழிக்க முன் வந்தார். கல்வி அழியாத செல்வம் அல்லவா! அழியாத அச் செல்வத்தைத் தன் மகன் பெற வேண்டும் என்று தாயின் நெஞ்சம் விரும்பியது. அதற்காகத் தாயார் எல்லாவற்றையும் தியாகம் செய்ய விழைந்தார். என்னே தாய்மை அன்பு!

ஜகதீசருடைய உள்ளத்தில் அளவிலா மகிழ்ச்சி! பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் அவர் செய்து முடித்தார். புறப்பட வேண்டிய நாளும் வந்தது. தாய் தந்தையரிடம் விடைபெற்றுக் ...ண்டு ஜகதீசர் புறப்பட்டார். பெற்ற நெஞ்சம் ...வால் வருந்தியது; அன்பால் உருகியது. கப்பல் ...படும் நேரம் நெருங்கியது. அது மெதுவாக

நகர்ந்தது. மகன் படிப்பை முடித்துக் கப்பலில் வந்து இறங்குவது எப்பொழுது? அக் காட்சியைக் கண்ணாரக் கண்டு மகிழ்வது எப்பொழுது? இப்படித் தாய்மை நெஞ்சம் கனவுக் கடலில் மிதந்தது.

ஜகதீசர் கடலில் பயணம் செய்யும்போது உடல் நோயால் துன்புற்ருர். காய்ச்சல் அவர் உடலை வாட்டியது. இதற்கு முன்பே அவர் பலமுறை கடுங் காய்ச்சலால் அவதி உற்றிருக்கிருர். அவரது உடல் நோயால் தளர்ச்சி உற்றது; ஆனல், உள்ளம் தளர்ச்சியுறவில்லை. என்ன நேரிடினும் அவர் எடுத்த கருமத்தை முடித்தே தீர்வது என்ற உறுதியுடன் இருந்தார். இவருடன் பயணம் செய்த பலர் இவரது உடல்நிலை கண்டு மனமிரங்கினர். எப்படியோ அப் பொல்லாத காய்ச்சலினின்றும் தப்பி, அவர் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்.

அங்குச் சென்று இலண்டன் பல்கலைக் கழகத்தில் இவர் மருத்துவக் கல்வி பயிலத் தொடங்கிஞர்; ஆர்வத்துடன் கற்ருர். அவர் அத்துறையில் உடற் கூறுகளை எல்லாம் அறியவேண்டி யிருந்தது; அதற்காக உடற்கூறுகளை அறுத்துப் பரிசோதனை செய்வது இன்றியமையாததாய் இருந்தது. அப் பயிற்சி அவர் உடல் நிலைக்கு ஒத்துக்கொள்ளாததாய் இருந்தது. கொடிய காய்ச்சலை அது கொண்டு வந்து சேர்த்தியது. அதனல், ஜக[illegible] மருத்துவத் துறையைக் கைவிட வேண்டிய[illegible] ஏற்பட்டது. பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்[illegible] சேர்ந்து அறிவியற் கல்வியினைத் தம் சிற[illegible]

பாடமாக எடுத்துப் பயின்றார். இங்கும் இடை இடையே காய்ச்சலால் அவர் துன்புற நேர்ந்தது. எனினும், அவர் விடாமுயற்சியுடன் பயின்று சிறப்பாகத் தேர்ச்சி அடைந்து பி. எஸ்ஸி. பட்டம் பெற்றார்.

ஜகதீசர் கல்வியை முடித்த பின்னர்த் தாய் நாட்டுக்குத் திரும்பினார். பெற்றோர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; மகனை மனமாரப் பாராட்டி மகிழ்ந்தனர்.

அப்பொழுது ரிப்பன் பிரபு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அவர் இந்தியர்கள் மீது அன்பும் அனுதாபமும் கொண்டிருந்தார். அவருடைய உதவி ஜகதீசருக்குக் கிடைத்தது. அதன் பயனாக இவருக்குக் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியர் பணி கிடைத்தது.

அந்நாளில் இந்தியர்களை ஆங்கிலேயர்கள் மதிப்புத் தந்து போற்றவில்லை. உயர் பதவிகளை ஆங்கிலேயர்களே வகித்துவந்தனர். ஜகதீசர் மாநிலக் கல்லூரியில் ஆசிரியராய் அமர்ந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. தவிர, ஜகதீசருக்கு அப்பதவிக்குரிய ஊதியமும் வழங்கப்படவில்லை. றவர்கள் பெற்ற ஊதியத்தில் மூன்றில் இரண்டு ங்கே இவருக்குக் கிடைக்கும் என்று கல்லூரி தல்வர் கூறினார். இதனைக் கேட்ட ஜகதீசர் ளம் வருந்தினார். ஆங்கிலேயர்கள் போதித்

பாடத்தைத்தான் இவரும் போதித்தார். இன்னுஞ் சொல்லப் போனால், அவர்களைக் காட்டிலும் இவர் மிகுந்த அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தார். இந்தியன் என்ற காரணத்திற்காக இவருடைய அறிவும் ஆற்றலும் மதிக்கப்படவில்லை. குறைவான ஊதியம் பெற்றுக்கொண்டு பணிபுரிவதைவிட ஊதியம் பெறாமலேயே பணியாற்றுவது என்று ஜகதீசர் முடிவு செய்தார். இத்தகைய முடிவுக்கு இவர் விரைந்து வந்து விடவில்லை. ஆழ்ந்து சிந்தித்த பிறகே இவர் இந்த முடிவை மேற்கொண்டார். இம் முடிவை இவர் மேற்கொண்ட இதே நேரத்தில் தந்தையார் கடனில் ஆழ்ந்து இருந்தார். அக்கடனைத் தீர்க்க இவர் முன்னோர் ஈட்டி வைத்த 'நில புலன்களையும் வீடு வாசலையும்' விற்றுவிட முடிவு செய்தார். எத்தனையோ தொல்லைகள் இவரை நெருக்கின. ஆனாலும் இவர் செய்த முடிவை மாற்றவில்லை; ஊதியம் பெறாமலேயே பணிபுரிந்து வந்தார். இப்படிச் சில மாதங்கள் மட்டுமின்றி, மூன்று ஆண்டுகள் வரை ஊதியம் இன்றியே இவர் உழைத்தார். என்னே இவரது உள்ள உறுதி!

மேலதிகாரிகளின் மனம் மாறியது; அதற்குக் காரணம் இவருடைய திறமையை அவர்கள் உணர்ந்து கொண்டதே ஆகும். இவரது பாடம் போதிக்கும் திறன் மாணவர்கள் உள்ளத்தை கவர்ந்தது. மாணவர்கள் இவரிடம் அன்புடன் நடந்து கொண்டனர்; இவரைப் போற்றிப் புகழ்தனர். இவர் வகுப்பிற்கு வரும் நேரத்

அவர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். மாநிலக் கல்வித்துறைத் தலைவரும் இவரது பெருமையை உணர்ந்தார்; இனிமேலும் இவருக்கு உரிய ஊதியம் வழங்காமல் இருப்பது முறையாகாது என்பதை உணர்ந்தார். எனவே, அவர் மூன்று ஆண்டுகட்கு உரிய ஊதியம் சிறிதும் குறைபடாமல் ஜகதீசருக்குக் கிடைக்கும்படி செய்தார்.

ஜகதீசர் ஆசிரியராய் அமர்ந்த பத்து ஆண்டுகட்குப் பிறகே தமது ஆராய்ச்சியினைத் தொடங்கினார். இவர் முதலில் மின்சாரத்தைப் பற்றி ஆய்ந்தார். இவர் தாம் செய்த ஆராய்ச்சியின் முடிவுகளைப் பலரும் ஒப்புக்கொள்ளும்வண்ணம் விளக்கிக் காட்டினார். கல்கத்தா நகரப் பொது மண்டபத்தில் எல்லாருடைய முன்னிலையிலும் இவர் தமது ஆராய்ச்சிகளை வெளியிட்டார். இவருடைய ஆராய்ச்சியினைக் கண்டு களிக்க அரசியல் தலைவர்களும் வந்து கூடியிருந்தனர். அங்கு மின்சார ஆற்றல் கம்பிகளின் உதவி இன்றியே பொருள்களைக் கடக்கும் ஆற்றல் வாய்ந்தது என்பதைச் செயல் மூலம் இவர் விளக்கிக் காட்டினார். மின்சார ஆற்றல் கம்பியின் உதவி இன்றியே மூன்று சுவர்களைக் கடந்து சென்று ஒரு மணியை இயக்கியது. அவ்வளவில் அமையாமல் அவ்வாற்றல் பின்னுஞ்
ன்று கைத்துப்பாக்கி ஒன்றினை வெடிக்கச்
சய்தது. இக் காட்சியினைக் கண்ட மக்கள் வியப்
டைந்தனர்; "காணாதன கண்டோம்" என்று
கைக் கூத்தாடினர். "பாரதத்தாயின் ஒப்பற்ற

தவச் செல்வர் ஜகதீசர்" என்று இவரை மக்கள் பாராட்டினர்.

இவர் தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை இலண்டனிலுள்ள 'இராயல் கழகத்து'க்கு அனுப்பினார். இராயல் கழகம் என்பது மதிப்பு வாய்ந்த ஒரு கழகமாகும். அக் கழகம் கல்வியில் தேர்ச்சி பெற்ற பல பெரியார்களை உறுப்பினர்களாகப் பெற்றது. அக்கழகம் தகுதி உடைய ஒன்றினையே வரவேற்கும். அத்தகைய பெருமை சான்ற கழகம் இவருடைய கட்டுரைகளை வெளியிட்டது; இவருடைய ஆராய்ச்சியினைப் போற்றிப் புகழ்ந்தது. இதன் மூலம் இவருடைய புகழ் மேலை நாடுகளிலும் பரவியது. அக் கழகம் இலண்டனுக்கு ஒரு முறை வரும்படி இவருக்கு அழைப்பு அனுப்பியது; அறிஞர்கள் குழுவின் முன்னிலையில் இவருடைய ஆராய்ச்சியினை வெளியிடும்படி வேண்டிக் கொண்டது. அறிவியல் பற்றி ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பல்கலைக் கழகங்கள் இவரை அழைத்தன. இவர் அவ் வரவேற்பினை ஆவலுடன் ஏற்றுக்கொண்டார்.

அரசியலாரின் அனுமதியுடன் ஜகதீசர் இங்கிலாந்துக்குச் சென்றார். 'இராயல் கழகம்' இவரது கட்டுரைகளை வெளியிட்டதன் பயனாய் இவர் புகழ் எங்கும் பரவியிருந்தது. ஆகவே, இங்கிலாந்தின் தலைசிறந்த நாளிதழ்கள் எல்ல[illegible] இவர் வருகையினைப் பெருமையுடன் வெளியிட்ட[illegible] அதன் பயனாய் இங்கிலாந்தில் இவருக்கு மிகு[illegible] வரவேற்புக் காத்திருந்தது.

அறிவியற் கழகங்களும், பல்கலைக் கழகங்களும் இவர் கண்ட உண்மையினை விளக்கிச் சொற்பொழிவு ஆற்றுமாறு வேண்டிக்கொண்டன. கேட்டோர் வியக்கும்வண்ணம் இவர் தாம் கண்டுபிடித்த உண்மைகளை எடுத்துவிளக்கினர். இவர் ஒரு கருவி கண்டு பிடித்திருந்தார்; அதன் துணைகொண்டு ஒளிக்கும், மின்சார அலைக்கும் இருக்கும் ஒற்றுமையை விளக்கிக் காட்டினர். இதற்குமுன் எவரும் இவ் விரண்டிற்கும் இருந்த ஒற்றுமையை இவ்வளவு தெளிவுடன் விளக்கிக் காட்டவில்லை. அறிவியற் பேராசிரியர்கள் இவருடைய ஆராய்ச்சி பயன் உள்ளது என்று பாராட்டினர்.

பின்பு இவர் பாரிசு மாநகரம் சென்றார். அங்கிருந்த அறிவியற் கல்விக் கழகத்தில் சொற் பொழிவாற்றினர். அக்கழகத்தினர் இவரையும் ஓர் உறுப்பினராக மனமுவந்து ஏற்றுக்கொண் டனர். ஜெர்மனியைச் சேர்ந்த பெர்லின் முதலான நகரங்கட்குச் சென்று தமது ஆராய்ச்சியை விளக்கிச் சொற்பொழிவு ஆற்றிய பின்னர், ஜகதீசர் இந்தியாவிற்குத் திரும்பினர். அறிவியற் பெரும் புலவர் ஒருவரைப் பெற்றமையால், இந்தியாவின் பெருமை உயர்ந்தது.

ஜகதீசர் இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர் ...னிலும் தீவிரமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டார்; ...பல உண்மைகளைக் கண்டுபிடித்து வழங்கினர். ...ர் தம்முடைய உழைப்பின் மூலம் மக்களின் ...பு உலோகத்திலும் இருப்பதனைக் கண்டார்.

மனிதன் நீண்டநேரம் உழைத்தால் களைப்பு அடைந்துவிடுகிறான். களைப்புத் தீர நல்ல ஓய்வு தேவைப்படுகிறது. ஓய்வெடுத்த பின்னர் மீண்டும் சுறுசுறுப்புடன் வேலை செய்யமுடிகிறது. இதே இயல்பு உலோகத்திலும் அமைந்திருப்பதனை இவர் கண்டார். இவர் கண்டுபிடித்த பல கருவிகளுள் மின்சார அலைகளை வாங்கிக் காட்டும் கருவியும் ஒன்று. சில மணி நேரம் வேலை செய்த பின்னர் அக்கருவியின் ஆற்றல் குறைந்தது. சிறிது நேரம் ஓய்வுபெற்ற பின்னர் அக்கருவி முன்போலவே நன்கு செயல்பட்டது. இவ்வாறு மனித இயல்பு உலோகத்திலும் உண்டு என்பதைக் கண்கூடாய் விளக்கிக் காட்டினார்.

ஜகதீசர் அடுத்தபடியாக மரஞ்செடிகொடிகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்த விழைந்தார். நம்முடைய முன்னோர்கள் மரஞ்செடிகட்கும் உயிர் உண்டு என்று கூறியுள்ளனர். அவ்வுண்மையை இவர் அறிவியல் துணையால் எல்லாரும் ஒப்புக் கொள்ளும்படி நிலைநாட்டி உள்ளார்.

ஒன்று உயிருடன் உள்ளது என்பதை நாம் எவ்வாறு அறிகிறோம்? ஏதேனும் ஒரு தூண்டுதல் ஏற்பட்டால் அதனை உணர்ந்து வெளியிடும் ஆற்றல் இருக்குமாயின், அஃது உயிருடன் உள்ளது என்பதை அறிகிறோம். நம்மீது ஒரு கொசு வந்து அ
தால் அவ்விடத்தில் ஓர் உணர்ச்சி உண்டாகிற
இங்குக் கொசுவின் தூண்டுதலால் அவ்வுணர்
ஏற்படுகிறது. தொட்டாற்சிணுங்கி என்று ஒரு

உள்ளது. அதன் இலைகளைத் தொட்டால் மடிந்து தொங்கும். அவ்வாறு அதன் இலைகள் மடிந்து தொங்குவதற்குக் காரணம் தொட்டதனால் ஏற்பட்ட தூண்டுதலே ஆகும். அறுவைச் சிகிச்சையின்போது வலி தெரியாமல் இருப்பதற்காக மருத்துவர்கள் நோயாளர்களுக்கு மயக்க மருந்து கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் உணர்ச்சி இழந்து வலியினை அறியாமல் இருக்கிறார்கள். அதேபோல் ஜகதீசர் செடிகளுக்கும் மயக்கமருந்து ஊட்டி உணர்ச்சி இழக்கச்செய்து காட்டினார். இவ்வாறு மயக்கமருந்து ஊட்டிப் பெரிய மரங்களைப் பெயர்த்து எடுத்துச் சென்று நாம் வேண்டிய இடத்தில் நடமுடியும்.

மின்சாரத் தாக்குதலால் செடிகள் அடைகின்ற மரண வேதனையையும், மொட்டுக் கோஸ் துண்டு கொதிநீர் பட்டவுடன் துடிதுடித்து மாள்கின்ற சாக்காட்டு நிலையினையும் கருவிகள்மூலம் பலரும் அறியும்வண்ணம் இவர் எடுத்துக் காட்டினார். இதுவரை செடிகளுக்கு உயிரில்லை என்று எண்ணியவர்கள் அக்காட்சியினைக் கண்டு கண்ணீர் உகுத்தனர்; நெஞ்சம் உருகினர்.

இதற்கிடையில் இவர் பலமுறை ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுவந்தார்; ஒவ்வொரு முறை சல்லும்போதும் புதிய புதிய உண்மைகளை ஆய்ந்து வளியிட்டார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த றிஞர்கள் இவரது ஆராய்ச்சிகளைப் போற்றிப் ழ்ந்தனர். இதன் பின்னரே இந்திய அரசியலார்

இவரை மதித்துப் போற்றத் தலைப்பட்டனர். இவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் அரசாங்கம் கொஞ்சமும் குறையாமல் முழு ஊதியத்தையும் இவருக்கு நல்கியது. நாளடைவில் மதிப்புவாய்ந்த பட்டங்கள் பலவற்றை இவர் அடைந்தார். இந்திய அரசாங்கம் **1917** ஆம் ஆண்டு இவருக்கு ஸர் பட்டம் வழங்கியது.

ஜகதீசர், தம்முடைய ஆராய்ச்சி வருங்கால மக்களுக்கும் பயன்படவேண்டும் என்றும், மேன் மேலும் தொடர்ந்து வளர வேண்டும் என்றும் விரும்பினர். அதற்காக இவர் கல்கத்தாவில் ஓர் ஆராய்ச்சி நிலையத்தை அமைத்தார். இவர் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்திய கருவிகள் அனைத்தும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. பல மாணவர்கள் இவரது ஆராய்ச்சி நிலையத்தில் ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் உழைத்தனர். மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து இவரது ஆராய்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர். மரஞ்செடிகொடிகள் எல்லாம் எவ் வாறு உணர்ச்சியுடனும் உயிருடனும் உள்ளன என்பது இங்கு நன்கு விளக்கிக் காட்டப்பட்டது. அதற்காகப் பல கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் துணையால் மக்கள் இதற்கு முன் காணாத புதுமைகள் பலவற்றைக் கண்டனர். அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் இவரது ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்து சிறப்பித்தனர். இவ்வாறு இவரது ஆராய்ச்சி நிலையம் ஒருகலைக் கோயிலாக திகழ்ந்தது.

இந்தியாவில் மட்டுமின்றி, இவருடைய புகழ் உலகின் எல்லாத் திசைகளிலும் பரவியது. உலகின் தலைசிறந்த நாளிதழ்கள் எல்லாம் இவரைப் பாராட்டி எழுதின. அறிவியற் கழகங்கள் எல்லாம் இவரது ஆராய்ச்சி உரைகளைக் கேட்க விரும்பி நின்றன. இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகளை விரும்பி ஏற்காத பல்கலைக் கழகங்களே இல்லை எனலாம். பேராசிரியர்கள் எல்லாரும் இவரை மனமுவந்து பாராட்டினர். இங்கிலாந்தின் தலைசிறந்த அறிவியற் கழகமாகிய 'இராயல் கழகம்' இவரைத் தன்னுடைய உறுப்பினராய் ஏற்றுக்கொண்டது. இப்பதவி எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியது அன்று; தலைசிறந்த அறிவியல் வல்லுநருக்கே கிடைக்கக் கூடியதாகும்.

இவ்வாறு ஜகதீசர் உழைப்பின் பயனாய்ப் புகழேணியின் உச்சியை அடைந்தார். அவர் அடைந்த இன்னல்கள் பலப்பல. அவற்றைக் கண்டு அவர் மலைத்து நின்றுவிடவில்லை; ஓயாமல் உழைத்தார். இயற்கையினூடே மறைந்துகிடக்கும் உண்மைகளைக் கண்டறிவதே தம் வாழ்வின் குறிக் கோளாய்க்கொண்டு அவர் வாழ்ந்தார். பாரதம் பெற்ற தவச் செல்வராம் ஜகதீசர் தம் எழுபத்து ஒன்பதாம் வயதில் இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்து ண்ணுலகம் அடைந்தார். இம்மண்ணுலகம் உள்ள ரை அவர் புகழ் நிலைத்து நிற்கும்.

4. தாமஸ் ஆல்வா எடிசன்

இன்று படக்காட்சி பார்க்காதவர்களே இருக்க மாட்டார்கள். கற்றவர், கல்லாதவர், ஏழை, செல்வர் எல்லாரும் சென்று படக்காட்சி பார்க்கிறார்கள். இப்படி அனைவருக்கும் பொதுவான ஒரு கலையாகப் படக்காட்சி விளங்குகிறது. பள்ளிக்கூடங்களில் படக்காட்சி மாணவர் அறிவை வளர்க்க மிகவும் பயன்படுகிறது. ஒவ்வொரு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தினையும் நாம் படக்காட்சியில் கண்டுமகிழமுடியும். இத்தகைய படக்காட்சியினைக் கண்டுபிடித்து நமக்கு வழங்கியவர் யார் தெரியுமா? தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் ஆவார். அவருடைய வரலாற்றை இங்குக் காண்போம்.

தாமஸ் ஆல்வா எடிசன் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மிலான் என்னும் நகரில் பிறந்தார். அவருடைய தந்தையார் சாமுவேல் எடிசன் என்பவர் ஆவார்; தாயார் நான்சி எலியட் என்பவர் ஆவார். எடிசனின் தந்தையார் மரம் விற்கும் தொழில் செய்து வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய மனைவியார் நன்கு படித்தவர். துடன் அவ்வம்மையார் ஆசிரியராகப் பணியாற வந்தார். ஆதலால், அவ்வம்மையாரே தம் மகனு நன்கு பாடங்களைப் போதித்து வந்தார். வாழ்

எளிய நிலையிலிருந்து முயற்சியால் முன்னேற்றம் அடைந்தவர்கள் வரலாற்றை எடிசனுக்கு அடிக்கடி கூறுவார். அவ் வரலாற்றினைக் கேட்கும்போதெல்லாம் தாமும் அவ்வாறு முயற்சியால் முன்னேற வேண்டும் என்று எடிசன் எண்ணிக் கொள்வார்.

எடிசன், இளமையிலேயே மிகவும் அறிவு நுட்பம் உடையவராய் இருந்தார்; எதனையும் ஆராய்ந்து உண்மை காண்பதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தார். அவருடைய வீட்டில் வாத்துக்கள் இருந்தன. அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விதத்தை அவர் கவனித்து வந்தார். ‘ஏன் நாமும் இதைப்போல் செய்யக் கூடாது?’ என்று அந்த இளநெஞ்சம் எண்ணியது. ஒருநாள் சில முட்டைகளை எடுத்து அடுக்கி வைத்து அவர் அடைகாக்கத் தொடங்கிவிட்டார். தாயார் மகனைக் காணாது எங்கெங்கோ தேடினார்; ‘ஆல், ஆல்’ என்று வாய்விட்டுக் கூறிப் பன்முறை அழைத்தார். எடிசனைப் பெற்றோர்கள் ‘ஆல்’ என்று செல்லப் பெயரிட்டு அழைத்து வந்தனர். பலமுறை அழைத்தும் மகன் வராமையால் தாயார் மீண்டும் எல்லா இடங்களையும் தேட ஆரம்பித்தார்; இறுதியாக எடிசன் ஒரு மூலையில் அடைகாத்துக் கொண்டிருப்பதனைக் கண்டார்; மகனின் ஆய்வு மனப்பான்மையை எண்ணி வியந்தார்.

இ[illegible] எடிசன் கல்வி கற்பதிலும் மிகவும் ஆர்வம் [illegible]ண்டிருந்தார். நியூட்டன் என்ற அறிவியலறிஞர் பெ[illegible]ய பிரின்ஸிப்பியா என்னும் நூலை அவர்

பன்முறை படித்திருக்கிறார். அவர் ஒவ்வொரு நூலைப் படித்து முடித்ததும், தந்தையார் அவருக்கு ஏதாவது ஒரு பரிசு கொடுப்பார். எனவே, மகன் ஆர்வம் படிப்பில் மேன்மேலும் உயர்வதாயிற்று.

எடிசனின் தந்தையார் தம் வருமானத்தைப் பெருக்குவதற்காக வேறு ஊருக்குச் செல்ல விரும்பினார். அதனால், அவருடைய குடும்பம் மிலானிலிருந்து கியூரான் என்னும் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அங்கும் போதிய வருவாய் கிடைக்க வில்லை. எனவே, எடிசனும் வாழ்க்கைப் போராட் டத்தில் ஈடுபட நேர்ந்தது.

எடிசன் முதன்முதலில் புகை வண்டியில் செய்தித்தாள் விற்கும் பணியினை மேற்கொண்டார். அந்தப் பணியில் அவருக்கு நல்ல வருவாய் கிடைத்தது. நாள்தோறும் மாலையில் அவர் கை நிறையப் பணத்துடன் வீட்டிற்குச் செல்வார். அதனைக் கண்டு பெற்றோர்களின் உள்ளம் மிகவும் மகிழ்ச்சி அடையும். அப்பொழுது அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தது. போரைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்வதில் மக்கள் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். எனவே, முன்னைவிடப் பன்மடங்கு செய்தித்தாள்கள் அதிகமாக விற்றன. இதனால் எடிசனுக்கு ந[illegible] ஊதியம் கிடைத்து வந்தது.

எடிசன், செய்தித்தாள்கள் விற்ற நேரம்[illegible] எஞ்சிய நேரத்தைப் பயனுள்ள முறையில் க[illegible]

வந்தார்; புகைவண்டியின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு பல அறிவியல் நூல்களைப் படித்து வந்தார்.

நாளடைவில் அவரே ஒரு செய்தித்தாளை ஆரம்பித்தார். பழமையான அச்சு இயந்திரம் ஒன்றை அவர் குறைந்த விலைக்கு வாங்கினார்; புகைவண்டியின் ஒரு மூலையில் அதனைப் பொருத்தினார். அதில் செய்தித்தாளை அச்சிட்டு வெளியிட்டார். அந்தச் செய்தித்தாளின் பெயர் 'பெருவழித் தூதுவன்' என்பது ஆகும்.

செய்தித்தாள்கள் விற்று முடிந்ததும், எடிசன் ஆய்வு வேலையில் மனத்தைச் செலுத்துவார்; வீட்டிலும் இரவு பன்னிரண்டு மணிவரை ஆராய்ச்சியில் ஈடுபடுவார். ஒருநாள் நேரத்திலேயே செய்தித்தாள்கள் எல்லாம் விற்று முடிந்துவிட்டன. புகைவண்டியில் தம் அறையில் இருந்துகொண்டு அவர் ஆய்வுப் பணியில் ஈடுபட்டார். வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவருடைய மனம் அதைவிட அதிகமான வேகத்தில் எதையோ ஆய்ந்து கொண்டிருந்தது. வண்டியின் அதிர்ச்சியால் கண்ணாடிப் புட்டி ஒன்று கீழே விழுந்து உடைந்தது. அதற்குள் இருந்த இரசாயனப் பொருளில் நெருப்புப் பற்றி எரிந்தது. கொழுந்து விட்டெரிந்த நெருப்பு எடிசனின் உள்ளத்தில் அச்சத்தை
டியது. அவர் நெருப்பை அணைக்க அரும்பாடு
டார். அவரால் நெருப்பை அணைக்க முடியவில்லை.
கை மேகமண்டலம் போலச் சூழ்ந்தது. வண்டியின்
காப்பாளர் அதனை அறிந்தார்; ஓடிவந்து

நெருப்பை அணைத்தார். மிக்க கோபம் உற்ற அவர் எடிசனின் கன்னத்திலே ஓங்கி அறைந்தார். அந்த அறை எடிசனின் காது ஒன்றைச் செவிடாக்கியது. அடுத்த நிலையத்தில் புகைவண்டி நின்றது. வண்டியின் பாதுகாப்பாளர் எடிசனை வெளியில் பிடித்துத் தள்ளினார். அத்துடன் அவர் ஆய்வு நடத்திக் கொண்டிருந்த சாமான்களையும் தூக்கித் தூர எறிந்தார். அவை எல்லாம் மூலைக்கு ஒன்ருகப் போய் விழுந்தன.

எடிசன் மனமுடைந்து வீடு திரும்பினர். அன்னையார் ஆறுதல்மொழி கூறி அவரைத் தேற்றினர்; அவருக்கு ஆய்வு நடத்துவதற்கு வேண்டிய வசதிகளை வீட்டிலேயே செய்துகொடுப்பதாகவும் கூறினர். அதனல் எடிசன் ஒருவாறு மனம் தேறினர்.

ஒருநாள் எடிசன் 'மௌண்ட் கிளெமென்ஸ்' புகைவண்டி நிலையத்தில் நின்றுகொண்டிருந்தார். அவ்வழியாகக் குழந்தை ஒன்று வந்துகொண்டிருந்தது. அந்தக் குழந்தைக்கு மூன்று ஆண்டுகூட ஆகவில்லை. அது புகைவண்டிப் பாதையைக் கடந்து செல்ல முயன்றது. எடிசன் தற்செயலாகக் குழந்தையின் பக்கம் திரும்பினர். பாரமேற்றிக்கொண்டுவரும் புகைவண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. வண்[illegible] குழந்தையின் அருகில் வந்துவிட்டது. இன்னு[illegible] ஒருகணம் தாமதித்திருந்தாலும் குழந்தையி[illegible] உயிரை வண்டி குடித்திருக்கும். எடிசன் ஒ[illegible]

பாய்ச்சலாகப் பாய்ந்து குழந்தையைத் தாவி எடுத்துக்கொண்டு அப்புறம் குதித்தார். குதிக்கும்போது வண்டி அவர்மீது சற்று மோதிவிட்டது. எனினும், குழந்தைக்கு எவ்விதமான தீங்கும் நேரவில்லை.

இச்செயலைக் கண்ட குழந்தையின் தந்தை மெக்கன்சி மிகவும் மகிழ்ந்தார்; தம் நன்றியறிதலை எடிசனுக்குத் தெரிவித்துக் கொண்டார். மெக்கன்சி மௌன்ட் கிளெமென்ஸ் புகைவண்டி நிலையத்தின் தலைவராவார். அவர் நட்பு எடிசனுக்குக் கிடைத்தது மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. எடிசனுக்குத் தந்தி அடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஆவல் இருப்பதனை மெக்கன்சி அறிந்தார். அன்று முதல் அவர் தந்தி அடிக்கும் முறையை எடிசனுக்குக் கற்றுக்கொடுத்தார்.

எடிசன் மிக விரைவில் அத்தொழிலைக் கற்றுக் கொண்டார். மெக்கன்சியின் உதவியால் தந்தி அடிக்கும் வேலை அவருக்குக் கிடைத்தது. வேலையில் அமர்ந்ததும் வாணிகத் தொழிலை எடிசன் நிறுத்தி விட்டார். அவர் இரவு முழுவதும் தூங்காமல் கண்விழித்து வேலை பார்க்க வேண்டியிருந்தது. மேலிடத்தார் மணிக்கொருமுறை ஆறு என்னும் எண்ணைத் தந்தி மூலம் தெரிவிக்கும்படி எடிசனுக்குக் கட்டளையிட்டிருந்தனர். இவ்வாறு செய்வதால் வேலை ...பவர்கள் உறங்காமல் கவனமாய் இருப்பார்கள் ...லரோ? அதற்காகவே மேலிடத்தார் இவ்வாறு ...தனர். ஆயிரம் ஆயிரம் புதிய பொருள்களைப் ...த்து உலக மக்களை வியப்பில் ஆழ்த்தப்போகும்

எடிசனுக்கு இதற்கா வழி தெரியாது! அவர் புதிய கருவி ஒன்றை அமைத்தார். அக்கருவியிேைடு தந்தி அடிக்கும் கருவிகளையும் கடிகாரத்தையும் தொடர்பு படுத்தினர். மணிக்கொருமுறை அக்கருவி தானே ஆறு என்னும் எண்ணைத் தந்திமூலம் மேலிடத் தார்க்கு அனுப்பிக்கொண்டிருந்தது. எடிசன் உறங் கிக்கொண்டிருந்தார். மேலிடத்தார்க்கு இது தெரி யாது. 'எடிசன் கடமையில் கண்ணுய் இருக்கிறுர். தவருமல் மணிக்கொருமுறை செய்தி அனுப்புகிறுர்' என்று அவர்கள் வியப்புற்றனர். ஆனல், எத்தனை நாட்களுக்கு இவ்வாறு மேலிடத்தாரை ஏமாற்ற முடியும்? உண்மை விரைவில் மேலிடத்தாருக்குத் தெரியலாயிற்று. எடிசன் வேலையிலிருந்து நீக்கப் பட்டார்.

பிறகு, அவருக்குப் பாஸ்டன் நகரத்தில் இருந்த தந்திச் சாலையில் வேலை கிடைத்தது. அவர் அத்துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; ஒரே தந்திக் கம்பியில் செய்தி போய்க்கொண் டிருக்கும்போதே, எதிராகவும் செய்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார். இதற்கிடையில் வாக்குச் சீட்டுக்களைப் பதிவு செய்யும் மின்சாரக்கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். இதனல், அவர் புகழ் பாஸ்டன் நகர் எங்கும் பரவியது.

எடிசன் பாஸ்டன் நகரத்தைவிட்டு நியூய[illegible] நகரத்திற்கு வந்தார். அங்கு அவருக்கு [illegible] கிடைக்கவில்லை. அச்சமயம் நண்பர் ஒ[illegible]

எடிசன் அங்குச் சந்தித்தார். அந் நண்பர் எடிசனுக்கு உதவிபுரிந்தார். எடிசன், ஒருநாள் பொன் வாணிகக் கடையொன்றில் இருந்த மின்பொறி ஒன்று பழுதுபட்டு நின்றுவிட்டதை அறிந்தார். எடிசன் வலியச் சென்று அதனைச் செப்பம்செய்து ஓடச் செய்தார். அதனால் அக்கம்பெனியின் தலைவர் மிகவும் மனம் மகிழ்ச்சி அடைந்தார். எடிசனுக்கு வேலையும் தந்து உதவினார். அவர் மாதம் ஒன்றுக்கு எடிசனுக்கு முந்நூறு டாலர் ஊதியம் அளித்தார். வெறுங்கையுடன் நியூயார்க் நகருக்குள் நுழைந்த எடிசன் இப்போது கைநிறைய ஊதியம் பெற்றார்.

ஓய்வு நேரத்தில் எடிசன் பல அரிய ஆய்வுகளைச் செய்துகொண்டேயிருந்தார். அவர் தம்முடைய முயற்சியால் பங்கு விலைகளை அச்சடிக்கும் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். அவ்வியந்திரத்தைச் செய்து விற்கும் உரிமையை நாற்பதாயிரம் டாலருக்குச் செல்வர்களுக்கு விற்றுவிட்டார். இப்பொழுது எடிசனுக்குப் பணத்தைப் பற்றிய கவலை நீங்கியது.

அந்தப் பெருந்தொகையை எடிசன் பயனுள்ள முறையில் செலவிட்டார்; 1873 ஆம் ஆண்டு நீர்வார்க் [illegible]னும் இடத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்றை [illegible]மத்தார். அவருடைய தொழிற்சாலையில் பலர் [illegible]லை செய்து வந்தனர். அவர்களுள் பெண்களும் இ[illegible]ந்தனர். அங்கு வேலை செய்து வந்த மேரிஸ் டில்வல் என்ற அம்மையார் நற்[illegible]கள் நிறைந்து

விளங்கினர். எடிசன், அவ்வம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். அவ்வம்மையார் எடிசனுடைய ஆராய்ச்சிக்குப் பன்முறையில் உதவி வந்தார். எட்டு ஆண்டுகள் கழித்து அவ்வம்மையார் இறந்துவிடவே எடிசன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்.

எடிசன், தந்திச் சாலைகளுக்குத் தேவையான பல கருவிகளைத் தம் தொழிற்சாலையில் செய்து விற்று வந்தார். இதனல் அவருக்கு நல்ல இலாபம் கிடைத்தது. அக்காலத்தில் வழக்கத்தில் இருந்து வந்த தொலைபேசியால் நெடுந்தூரம் செய்தி அனுப்ப இயலவில்லை. அக்குறையை நீக்கி நீண்ட தூரம் பேச்சினை அனுப்ப வேண்டும் என்று எடிசன் முயன்ருர். அதற்காகப் பேச்சுச் செலுத்தி (டிரேன்ஸ் மிட்டர்) என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். இக்கருவி தொலைபேசியில் நேரிட்ட குறைபாட்டை நீக்கி, நீண்ட தூரத்தில் உள்ளவர்களோடும் பேச வழி செய்தது. இக்கருவியைக் கண்டு பிடித்ததின் பயனக இவருக்கு நூருயிரம் டாலர் கிடைத்தது. இதனல் இவர் பொருட்குறை முற்றிலும் நீங்கியது.

எடிசன், தொழிற்சாலை பன்மடங்கு பெருகியது. ஆகவே, வேறு ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டியநிலை ஏற்பட்டது. நியூயார்க் என்னுமிடத்தி லிருந்து 32 கி. மீ. தொலைவிலுள்ள மென் பார்க் என்னும் இடத்தில் புதிய தொழிற் ஒன்றை அவர் அமைத்தார். நாள்தோறும் அ தொழிலாளிகளுடன் இருந்து உழைப்பார். உழைப்பதற்கு சிறிதும் பின்வாங்கியது

ஒரு முறை தந்திக் கருவி யொன்று சரியாக இயங்க வில்லை. எடிசன், விடாமல் தொடர்ந்து அறுபது மணி நேரம் அதனோடு போராடிக் குறையை அறிந்து நீக்கினாராம். பின்னர், தொடர்ந்து முப்பத்தாறு மணி நேரம் உறங்கினாராம்.

எடிசன், 1877ஆம் ஆண்டு கிராமபோன் பெட்டியைக் கண்டுபிடித்தார். இப்பெட்டியைக் கண்டுபிடிக்க அவர் எவ்வளவு பாடுபட்டார் தெரியுமா? நாள் ஒன்றுக்கு அவர் இருபது மணி நேரம் உழைத்தார்; அப்படி ஆறு மாதங்கள் உழைத்தார்; அதன் பின்னரே வெற்றி கண்டார்.

ஒருநாள் எடிசனின் தொழிற்சாலையில் கிராம போன் பெட்டி பாடிக்கொண்டிருந்தது. மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து அதனைக் கண்டு மகிழ் வெய்தினர். சிலர், “என்ன இது? மாயமா? மந்திரமா?” என்று கூறி வியந்தனர். மற்றுஞ் சிலர், “பெட்டிக்குள் எவனோ ஒருவன் ஒளிந்திருந்து பாடுகிறான் போலிருக்கிறது” என்று கூறிச் சென்றனர். சில நாட்களில் இப்பெட்டியின் சிறப்பு எங்கும் பரவியது. இதன் பின்னர் எடிசனுடைய புகழ் பன்மடங்கு பெருகியது. எல்லாரும் அவருடைய திறமையைப் பாராட்டினார்கள்.

டேவி என்ற அறிஞர் மின்சார விளக்கினைக் டுபிடித்திருந்தார். ஆனால், அவர் கண்டுபிடித்த சார விளக்குச் சிறிது நேரமே எரியும் தன்மை டயதாய் இருந்தது. இதனை அறிந்த எடிசன் குறையை நீக்கி நீண்ட நேரம் எரியும்படியான

மின் விளக்கு ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று முயன்றார்; வெற்றியும் கண்டார். டைனமோ என்னும் கருவி ஒன்றினையும் செய்து மின் ஆற்றலை உற்பத்தி செய்து கொள்ளவும் வழிகாட்டினார்.

பேசும் படக்காட்சியினைக் கண்டுபிடிப்பதற்காக எடிசன் அரும்பாடு பட்டார். அவருடைய எண்ணம் நிறைவேற முப்பது ஆண்டுகள் பிடித்தன. தாம் கண்டுபிடித்த கிராமபோனின் உதவியால் படக்காட்சியில் தோன்றுபவர்களைப் பேசுவதுபோல் செய்து காட்டினார். இவ்வாறு அமைக்கப்பட்ட பேசும் படக்காட்சியில் முதன் முதலில் சிறு நிகழ்ச்சிகளே இடம் பெற்றன. குழந்தைகளின் விளையாட்டு, நடனம் போன்றவைகளே முதலில் காட்டப்பெற்றன. இன்று அக்கலை நன்கு வளர்ந்து விட்டது. எல்லா நாடுகளிலும் பேசும் படக்காட்சி சிறந்ததோர் இடம் பெற்று விளங்குகிறது.

இவ்வாறு எடிசன் கண்டுபிடித்த புதுமைகள் பலப்பலவாகும். அவர், தம்முடைய ஏழு வயது முதல் இறுதிவரை ஆய்வுகள் நடத்திக் கொண்டே இருந்தார். அவர் ஒருவரின் உழைப்பால் இன்று உலகம் அடைந்துள்ள நன்மை அளவிடற்கரியது. அப்பெரியார் தம் எண்பத்து நான்காம் வயதில் காலம் எய்தினார். அவருடைய புகழ் என்றும் அழியாமல் விளங்கும். அஃது அவர் கண்டுபிடித்த மின் விளக்கிலே ஒளிவிடுகிறது. மின்சார ரயில் வண்டிகளும் நாள்தோறும் அவர் புகழைப் பாடிக் கொண்டே ஓடுகின்றன.

5. நியூட்டன்

நியூட்டன் ஆங்கில நாட்டில் எளிய குடும்பம் ஒன்றில் பிறந்தார். அவர் பிறந்த மூன்று ஆண்டுக்குள்ளேயே, அவருடைய தந்தையார் காலம் ஆகி விட்டார். பிற்காலத்தில் மகன் பெரும் புகழ் பெற்று விளங்கியதைக் கண்ணாரக் கண்டு சிந்தை மகிழும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்காமல் போய் விட்டது. தந்தையை இழந்த நியூட்டன் பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்து வந்தார். அந்நாட்டு வழக்கப்படி அவர் தாயார் வேறு ஒருவரை மறு மணஞ் செய்து கொண்டார்.

தக்க பருவம் அடைந்ததும் நியூட்டன் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் படிப்பில் அதிகக் கவனம் செலுத்தவில்லை; வகுப்பில் பின் தங்கிய மாணவராகவே இருந்தார். அவருடைய வகுப்பில் ஒரு முரட்டு மாணவன் இருந்தான். அவனைக் கண்டு அந்த வகுப்பில் இருந்த மாணவர்கள் அனைவரும் பயந்து நடுங்கினார்கள்; அவனிடம் அன்பாக நடந்து [illegible]ண்டார்கள். ஒருநாள் அவன் நியூட்டனைக் [illegible]ால் உதைத்து விட்டான். நியூட்டன் கீழே [illegible]ந்தார். மற்ற மாணவர்கள் இதனைக் கண்டு சிரித்தார்கள். நியூட்டனின் உள்ளத்தில் மான

உணர்ச்சி பொங்கி எழுந்தது. உணர்ச்சியால் தூண்டப்பட்ட அவர், தம்மைவிட வலியவனான அந்த முரடன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். முரடன் கீழே வீழ்ந்தான். நியூட்டன் வெற்றிபெற்றார். சிறுவனான நியூட்டனின் ஆற்றலையும் அஞ்சாமை யையும் கண்டு மாணவர்கள் வியந்தார்கள். அன்று முதல் படிப்பிலும் சிறந்து விளங்கவேண்டும் என்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் எழுந்தது. விடா முயற்சி யுடன் பாடங்களைப் படித்தார். அந்த ஆண்டு இறுதிக்குள் பள்ளியில் தலைசிறந்த மாணவராகத் திகழ்ந்தார். ஆசிரியர்கள் நியூட்டனின் மாறுதலைக் கண்டு வியந்தார்கள்; மனம் மகிழ்ந்தார்கள்.

இளமையிலேயே அவரிடம் புதுமையாக ஏதே னும் ஒன்று செய்வதில் ஆர்வம் இருந்தது. அவர் ஒருமுறை பெரிய காற்றாடி ஒன்றைச் செய்தார். அந்தக் காற்றாடியின் வாலில் சிறிய விளக்குக் கூண்டு ஒன்றைக் கட்டி இரவில் பறக்கவிட்டார். இரவில் வானத்தில் தோன்றிய ஒளியைக் கண்டு மக்கள் அச்சம் உற்றனர்; "இஃது என்ன வால் நட்சத்திரமா?" என்று பலர் வியப்புற்றனர். இவ்வாறு புதுமையான விளையாடல்களில் அவர் மிகவும் விருப்பம் உடையவராய் இருந்தார்.

இரண்டாம் திருமணம் செய்து கொண் அவர் அன்னையார், தம் இரண்டாம் கணவனை இழந்தார். அதனால் அவ்வம்மையார் தம் மூன் குழந்தைகளுடன் சொந்த ஊருக்குத் திரும்பி

நேரிட்டது. நியூட்டன் தம் அன்னையாருக்கு உதவி புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், அவர் பள்ளிப்படிப்பு இடையில் நின்றது. நியூட்டன் இல்ல அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. கடைக்குச் சென்று இல்லத்திற்கு வேண்டிய பொருள்களை அவர்தான் வாங்கி வரவேண்டும்; தோட்டத்தையும் அவர்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். எத்துணை அலுவல் இருந்தபோதிலும், படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வம் குறையவில்லை. சில சமயங்களில் அலுவல்களைப் பற்றிக்கூடக் கவலைப் படாமல் படித்துக் கொண்டிருப்பார். அவர் நாள் தோறும் கணிதநூலை வைத்துக்கொண்டு கற்று வந்தார்.

படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வத்தை அவருடைய தாய் மாமன் அறிந்தார்; எப்படியாவது அவரை நன்கு படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணினார். அவர், தம்முடைய சகோதரியிடம் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அவ்வம்மையாரும் மனம் இசைந்தார். பின்பு, நியூட்டன் மறுபடியும் பள்ளி சென்று படிக்கத் தொடங்கினார்.

நியூட்டன் பள்ளியில் மிகவும் கவனத்துடன் படித்து வந்தார்; ஓய்வு நேரங்களில் ஏதாவது ஒன்றைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். அங்கும் அவர் நன்கு பயின்று பீ. ஏ. தேர்வில் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

நியூட்டன் அதன் பின்னர்த் தீவிரமாக அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவர் உள்ளம் எப்போதும் எதைப்பற்றியேனும் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டே இருக்கும். ஒருநாள் அவர் தம் தோட்டத்தில் அமர்ந்திருந்தார். அவர் எதிரிலிருந்த ஆப்பிள் மரத்திலிருந்து ஒரு பழம் கீழே விழுந்தது. அதனைக் கண்டதும் அவர் நெஞ்சம் அப்பழத்தைப் பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பித்து விட்டது. அவர் சிந்தனை எப்படி இருந்திருக்கக்கூடும்? நாமும் ஒரு கணம் எண்ணிப் பார்ப்போம். அப்படியொரு பழத்தைக் கண்டால் நம் உள்ளத்தில் எப்படிப்பட்ட எண்ணம் எழும்? “ஆகா! நாம் இங்கு வந்து அமர்ந்த நேரம் நல்ல நேரம் போலிருக்கிறது. நல்ல பழம் முதிர்ந்து கனிந்து விழுகிறது. தின்பதற்கு மிகவும் சுவையாக இருக்கும்...” இப்படிப்பட்ட வகையில்தான் நம் சிந்தனை செல்லும். ஆனால், நியூட்டன் என்ன எண்ணினார் தெரியுமா?

“ஏன் இப்பழம் கீழே வந்து விழுகிறது? மேலே சென்றால் என்ன? ஆம், ஆம் இப்பழம் மட்டும் கீழே வந்து விழவில்லை. இலை தழைகளும் இவ்வாறுதான் வந்து விழுகின்றன. கல்லை நாம் மேலே எறிந்தாலும், அது சிறிது தூரம் சென்று விட்டுக் கீழேதான் வந்து விழுகிறது. ஏன் இப்படி? இதற்கு என்ன காரணம்?” என்று நியூட்டன் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார். அவர் ஓயாமல் சிந்தித்தார். பூமியின் ஈர்ப்பு ஆற்றலால்

அவை கீழே வந்து விழுகின்றன என்பதனைக் கண்டறிந்தார். ஒரு பொருளின் நிறை மிகுந்தால் இவ்வாற்றலின் அளவும் கூடும். ஆப்பிள் பழத்தை விடப் பூமி எத்தனையோ மடங்கு பெரியதாகும். ஆகவே, பூமியினிடம் மிகப்பெரிய அளவில் இவ் வாற்றல் இருக்கிறது என்பதில் ஐயம் இல்லை. இதனாலேயே மேலே எறியப்படும் பொருள் எதுவாயினும், பூமி அதனைத் தன்னிடம் இழுத்துக் கொள்கிறது. இவ்வாற்றலினாலேயே பூமியும் மற்ற கோள்களும் தம்நிலை பிறழாமல் இருக்கின்றன. இல்லாவிட்டால் அவை ஒன்றோடு ஒன்று முட்டி மோதி அழிந்துவிட நேரிடும்.

சூரியனின் ஒளி நம் கண்ணுக்கு வெண்மையானதாகத் தெரிகிறது. ஆனால், உண்மையில் அது வெண்மையானது அன்று. அதன்கண் பல நிறங்கள் அமைந்திருக்கின்றன. இதனை முதன்முதலில் கண்டறிந்தவர் நியூட்டனே ஆவார். அவர் ஒருநாள் தமது அறையின் கதவுகளை மூடினார். எங்கும் இருள் நிறைந்து இருந்தது. கதவில் சிறிய துவாரம் ஒன்று செய்தார். அதன் வழியாகச் சூரிய ஒளி அறையினுள் நுழைந்தது. அவ்வொளியை முப்பட்டைக் கண்ணாடி ஒன்றின்மீது பாயும்படி அவர் செய்தார். அக் கண்ணாடியின்மீது பாய்ந்து ஊடுருவிச் சென்ற ஒளி சுவரின்மீது வீழ்ந்தது. சுவரில் பல வண்ண நிறங்கள் காட்சி அளித்தன. இவ்வாறு அவர் சூரிய ஒளியின் தன்மையை ஆய்ந்து உலகிற்கு உண்மையை உணர்த்தினார்.

இப்படி அவர் அறிவியல் வளர்ச்சிக்குச் செய்த தொண்டு அளவிடற்கு அரியதாகும். அவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு விட்டால் எல்லாவற்றையும் மறந்து விடுவார். அதுபற்றிப் பல சுவையான நிகழ்ச்சிகள் கூறுவது உண்டு. ஒருமுறை அவர் மாலை நேரத்தில் உலாவச் சென்றிருந்தார்; ஒரு சிறு குன்றின்மீது சென்று கொண்டிருந்தார். அவர் தம்முடன் தம் குதிரையையும் கொண்டு சென்றிருந்தார். குதிரையின் கடிவாளத்தைக் கையில் பிடித்தவண்ணம் அவர் முன்னால் போய்க் கொண்டிருந்தார். சிறிது தூரம் சென்றதும் குதிரையினின்றும் கடிவாளம் நழுவி வந்து விட்டது. குதிரை நின்றுவிட்டது. அவர் அதனை அறியவில்லை. வெறுங் கடிவாளத்தைக் கையில் பிடித்துக் கொண்டே வெகுதூரம் சென்று விட்டார். அப்பொழுது அவர் உள்ளம் எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தது. இறுதியில் அவர், தம் பின்னால் குதிரை இல்லாமையை அறிந்தார்.

இன்னொரு விந்தையான செயலும் அவரைப் பற்றிச் சொல்லப்படுகிறது. அவருடைய அறையின் கதவில் இரண்டு துவாரங்கள் இருந்தன. அவரைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர் அவற்றைக் கண்டார். அவர், "கதவில் இரண்டு துவாரங்கள் எதற்காகச் செய்யப்பட்டுள்ளன?" என்று கேட்டார். அதற்கு நியூட்டன், "நான் ஆராய்ச்சியில் ஈடுபடும் காலத்தில் கதவை மூடித் தாழிட்டு விடுவது வழக்கம். அப்பொழுது என் அன்புக்குப் பாத்திரமான

பூனைகள் மட்டும் உள்ளே வரலாம். அதற்காக இத் துவாரங்கள் செய்யப்பட்டுள்ளன” என்றார்.

அதனைக் கேட்ட நண்பர், “சரி, அதற்கு ஒரு துவாரம் போதுமே, இரண்டு துவாரங்கள் எதற்கு?” என்று கேட்டார். “ஒரு துவாரம் பூனை வருவதற்கு; மற்றொன்று அதன் குட்டி வருவதற்கு” என்று கூறினார்.

அதனைக் கேட்ட நண்பர் சிரித்துக்கொண்டே “பூனை வரும் துவாரத்திலேயே அதன் குட்டியும் வர இயலுமே” என்றார். அதற்கு நியூட்டன், “நீங்கள் கூறுவது உண்மைதான். இதனை நான் எண்ணிப் பார்க்கவே இல்லை” என்று கூறினார். ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கிடந்த அவருடைய உள்ளம் இதனைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை. இவ்வாறு அவர் புதுமையைக் கண்டறிய அறிவியல் உலகிலேயே மூழ்கிக் கிடந்தார்.

நியூட்டன் தம்முடைய இருபத்தொன்பதாம் வயதில் ‘இராயல் கழகத்தின்’ உறுப்பினராக ஆனார். ‘இராயல் கழகம்’ என்பது மதிப்பு வாய்ந்த ஒரு கலைக் கழகமாகும். அறிவு நிறைந்த பெரியோர்களே அதில் உறுப்பினர் ஆக முடியும். அப்பேறு நியூட்டனுக்கு இளமையிலேயே கிட்டியது.

நியூட்டன் தாம் கண்டறிந்த உண்மைகளை எல்லாம் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும் என்று எண்ணி, ‘பிரின்ஸிப்பியா’ என்னும் நூலை

எழுதி முடித்தார். அவர் வளர்த்து வந்த நாய், ஒரு நாள் இரவு மேசையின் மீது எரிந்து கொண்டிருந்த மெழுகுவத்தி விளக்கைக் கீழே தள்ளிவிட்டது. அதனல், அவர் எழுதிச் சேர்த்து வைத்திருந்த குறிப்புக்களில் பெரும்பகுதி நெருப்புக்கு இரையாய் விட்டது. வெளியிலிருந்து வந்த நியூட்டன் இதனைக் கண்டார்; உள்ளம் வருந்தினர். எனினும், அவர் நாயினை ஒன்றும் செய்யவில்லை; மன்னித்து விட்டார். இந்தச் செயல் அவர் உயிர்களின்மீது கொண்டிருந்த அன்பை நன்கு வெளிக்காட்டுகிறது. அவர் மீண்டும் பல ஆண்டுகள் முயன்று அந்த நூலை எழுதி முடித்து வெளியிட்டார்.

பின்னர், அரசியலார் நாணயச்சாலையின் மேற்பார்வையாளர் வேலையை நியூட்டனுக்கு அளித்தனர். அவர் அங்கும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; கள்ள நாணயங்களைக் கண்டுபிடித்தார்; புதிய முறையில் நாணயங்களை வெளியிடுவதற்குப் பெரிதும் உதவி புரிந்தார்.

நியூட்டன் 1903ஆம் ஆண்டு இராயல் கழகத்தின் தலைவர் ஆனர். பல ஆண்டுகள் அவர் அந்தப் பதவியை வகித்து வந்தார். இவ்வாறு மிக்க சிறப்புடன் வாழ்ந்து வந்த அப்பெரியார் தம் எண்பத்தைந்தாவது வயதில் நோய்வாய்ப்பட்டு மறைந்தார். அவர் அறிவியல் வளர்ச்சிக்குச் செய்த சேவை அளவிடற்கு அரியதாகும்.

கட்டுரைப் பயிற்சி

1. பிளாரன்சு நைட்டிங்கேல் அம்மையாரது இரக்க உள்ளம்.

2. நைட்டிங்கேல் விலங்கினத்தின்மாட்டுக் கொண்டிருந்த அன்பு.

3. நைட்டிங்கேல் அம்மையாரும் தாதியர் தொழிலும்.

4. போர்க் காலத்தில் நைட்டிங்கேல் அம்மையார் ஆற்றிய பணிகள்.

5. நைட்டிங்கேல் அம்மையாரது பண்பு நலன்கள்.

6. கியூரி அம்மையாருடைய இளமைக் கால வாழ்க்கை.

7. கியூரி அம்மையார் பல்கலைக் கழகப் பட்டப் படிப்புப் பெற வகுத்த திட்டம்.

8. கியூரி அம்மையாரும் ரேடியமும்.

9. அறிவியல் வளர்ச்சிக்குக் கியூரி அம்மையார் புரிந்த அருந் தொண்டுகள்.

10. கியூரி அம்மையாரின் எளிமை வாழ்வு.

11. ஜகதீச சந்திர போஸின் பள்ளிப் பருவ வாழ்க்கை முறை.

12. ஜகதீச சந்திர போஸும் ஆசிரியப் பதவியும்.

13. ஜகதீச சந்திர போஸ் கண்டுபிடித்த அறிவியல் உண்மைகள்.

14. ஜகதீசருடைய பண்பு நலங்கள்.

15. தாமஸ் ஆல்வா எடிசனுடைய இளமைக்கால ஆராய்ச்சிகள்.

16. எடிசன் குழந்தை ஒன்றினைக் காப்பாற்றிய திறனும் அதன் பயனும்.

17. எடிசனும் பேசும் படக் காட்சியும்.

18. எடிசனுடைய கண்டுபிடிப்புக்களால் நாம் அடைந்த நன்மைகள்.

19. நியூட்டனும் மாணவ வாழ்க்கையும்.

20. நியூட்டன் கண்டுபிடித்த அறிவியல் உண்மைகள்.

21. நியூட்டன் வாழ்வில் நடந்த சில சுவையான நிகழ்ச்சிகள்.

22. நியூட்டனும், மன்னிக்கும் பண்பும்.